SRI LANKA MUSLIM CONGRESS COLOMBO


# திசை

THISAI


உள்ளே....


- மரண தண்டனை முறையை ஒழியுங்கள்!
- மரணம் பற்றிய நினைவுகள்
- ஜாலியன் வாலா பாக் படுகொலைகள்
- முதலமைச்சர் வரதராஜப்பெருமாளின் பேட்டி
- தென்துருவத்தின் ''விஞ்ஞானக் கண்டம்''
- ரஷ்யப் பெண்கவிஞர் அன்னா அக்மதோவா
- விளையாட்டுக்களம், அங்கிங்கெனுதபடி, சிறுகதை.



திசை 1 18-8-1989 வெள்ளிக்கிழமை விலை : ரூபா 4-00 முகம் 32


# ராஜீவ் ஜே. ஆர். இரகசிய ஒப்பந்தம் ஏன்?

**எழுதப்பட்ட இலங்கை — இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்தாது காலதாமதப்படுத்தி, தனது சாமர்த்நியத்தால் இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தத்தை உருவாக்கிய ஜே. ஆர்., யுத்தம் நிகழ்ந்துகொண்டிருக்கையில் டெல்லிக்கு விஜயம் மேற்கொண்டார். அப்போது 1987 நொவம்பர் 7ஆம் திகதி அங்கு ஓர் இரகசிய ஒப்பந்தத்தை ராஜீவுடன் செய்துகொண்டார்.**

அண்மையில் பேச்சுவார்த்தை நடாத்த டெல்லிக்கு சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினவிடம், டெல்லி அரசு இந்த இரகசிய ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறியபோது, அந்த இரகசிய ஒப்பந்தத்திற்குத் தாம் மதிப்பளிக்கப் போவதில்லை என்று ரஞ்சன் விஜயரத்தின உறுதியாகக் கூறிவிட்டார்.

இந்தியாவிற்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்த, இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவர்களுள் ஒருவரான பெர்னண்டஸ் முயற்சிகளை மேற்கொண்டிருந்த வேளை, இவ்விரகசிய ஒப்பந்தத்தின் குறுக்கீட்டால், அம்முயற்சி தோல்வியில் முடிந்ததாகவும் தெரிகிறது.

இந்நிலையில் ஜே. ஆர். ஏன் இந்த இரகசிய ஒப்பந்தத்தை மேற்கொண்டார் என்ற கேள்வி எழுகிறது.

இந்த ஒப்பந்தத்தைச் செய்து டெல்லியைத் திருப்திப் படுத்தி, தன்னில் நம்பிக்கை கொள்ளச் செய்வதன் மூலம் ஜே. ஆர்..இந்திய அரசு விடுதலைப் புலிகளோடு சமா

(12ஆம் பக்கத் பார்க்க)

## மின்பொறியியலாளரின் அதிரடி நடவடிக்கை!

நல்லூர்க் கந்தன் உற்சவம் காரணமாகச் சென்ற வாரம் முதல் கோயிற் சுற்றுடலில் உள்ள பகுதிகளுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதனல் அயர்ந்த நிலையில் மந்தமாக இருந்த நல்லூர் மாலை வேளைகளில் சுறுசுறுப்பாகக் காணப்படுகிறது. ஆனல், தெருவீதிகளில் கள்ள மின்சாரம் எடுக்கும் 'வருத்தம்' தேரோடும் வீதியையும் விட்டு வைக்கவில்லையாம். நல்லூரில் தற்காலிகமாகக் கடைகளை அமைத்திருக்கும் கடை உரிமையாளர் சிலர் யாழ். மாநகர சபைக்கு 'டிமிக்கி' கொடுக்கலாம் என்ற எண்ணத்தில், வீடுகளில் இருந்து களவாக மின்சாரத்தை எடுத்திருக்கிறார்கள். திருவிழாத்துவக்கத்திலிருந்தே அவதானமாக இருந்த யாழ். மாநகரசபை மின் பொறியியலாளர் மேற்கொண்ட, மத்தியான வேளை நேரடி அதிரடி நடவடிக்கையினல் கள்ள மின் இணைப்புகள் உடனடியாகத் துண்டிக்கப் பட்டுள்ளன.

கோட்டைவிட்ட கடைக்காரர் பரிதாபமாக நிற்கிறார்கள்.

## வல்வைப் படுகொலைகளும் நால்வகை விளக்கங்களும்

ஓகஸ்ட் 2ஆம்திகதிவல்வெட்டித்துறையில் நிகழ்ந்த அசம்பாவிதங்களின் போது ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 70க்குக் குறையாத பொதுமக்கள்பலியானதாகவும் 300 வரையிலான கடைகள் வீடுகள் தீக்கிரையானதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இச்சம்பவம் நிகழ்ந்தது பற்றிச் சந்தேகம் இல்லை. ஆனல் எவ்வாறு நிகழ்ந்தது என்பதைப் பற்றி வெவ்வேருன நான்கு வகை விளக்கங்கள் வெளிவந்துள்ளன.

1. பி. பி. சி மற்றும் வெளிநாட்டுச் சுயாதீனமான செய்திகளின்படி 51 அல்லது 70 வரையிலான பொதுமக்கள் இந்தியராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், பல கடைகள், வீடுகள் எரிக்கப் பட்டதாகவும் தெரிய வருகிறது.

2. இந்தியதரப்பின்படி விடுதலைப்புலிகளுக்கும் இந்திய ராணுவத்தினருக்கும் ஏற்பட்ட மோதலில், இடையில் அகப்பட்ட பொதுமக்கள் மாண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

3. எல். ரி. ரி. ஈ இன் கருத்துப்படி 70க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும், 300 க்கும் மேற்பட்ட கடைகள் வீடுகள் எரிக்கப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுக்குத் தோல்வியா? — அரசியல் அவதானிகள் கருத்து

இலங்கை விவகாரம் சம்பந்தமாக இந்தியா கடைப்பிடித்து வந்துள்ள போக்கு இந்தியாவுக்கு தோல்வியைக் கொண்டு வந்திருப்பதாக அரசியல் அவதானிகளால் கருதப்படுகிறது.

இந்தியப் பத்திரிகைகள், வெளிநாட்டுப் பத்திரிகைகள் இதையிட்டுத் தெரிவித்துள்ள கண்டனங்கள், இந்திய எதிர்க்கட்சிகள் காட்டும் எதிர்ப்பு, இந்தியாவின் அயல்நாடுகளும் ஏனையநாடுகளும் இதுசம்பந்தமாகத் தெரிவிக்கும் அதிருப்தி, குறிப்பாக அண்மையில் ரஷ்யப் பத்திரிகையான 'இஸ்வெஸ்ற்றியா' இது பற்றிக் கூறுகையில் ''பெரியநாடு சிறிய நாட்டின்மேல் தன் ஆதிக்கத்தைத் திணிக்கிறது''. என்ற கருத்துப்பட எழுதியிருப்பது, இந்திய கொள்கை நிர்ணயிப்பாளர்களுக்கு அதிர்ச்சியையே கொடுத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேலும் இந்திய எதிர்க்கட்சியினர், அமைதிப்படைக்கு ஏற்பட்டுள்ள களங்கம் இந்தியாவின் கொள்கையைத் தீர்மானித்தவர்களாலேயே ஏற்பட்டுள்ளதென்றும், கடந்த வருடம் டிசம்பரில் எல்.ரி.ரி.ஈ. யினர் இந்திய அரசோடு பேச்சுவார்த்தைக்கு உடன்பட்ட போது அதைப் பயன்படுத்தாமல் விட்டதற்கும் இவர்களே பொறுப்பாளிகள் என்றும் பேசியுள்ளதாக, ஒரு பத்திரிகை தெரிவித்துள்ளது.

## இன்னுமொரு ரோஹண!

தென்னிலங்கையில், இந்திய அமைதிப் படைக்கு எதிராக ஜே. வி. பி. நடத்தும் பிரச்சாரங்களின் மத்தியில் வெளியிடப்பட்டுள்ள ஒரு துண்டுப் பிரசுரத்தில், 1987 ஜூலை 29 இல் கொழும்பில் இந்தியப் பிரதமருக்கு துவக்கின் அடிப்புறத்தால் மண்டையில் ஓங்கி அடிக்க முற்பட்ட கடற்படை வீரன் விஜித ரோஹண வின் படம் அச்சிடப்பட்டு, அதன் கீழ், எல்லா இலங்கைத் தேசாபிமானிகளும் இந்த ரோஹண வின் துவக்கைக் கையிலெடுத்து தமது விடுதலைப் போராட்டத்தைத் தொடரவேண்டும் என்று, கேட்கப்பட்டுள்ளது.

## இன்றுதேவைப்படுவது எது?

— டேவிட் செல்போன்

பிரபல ஆங்கில எழுத்தாளரும் பேராசிரியருமான டேவிட செல்போன் அண்மையில் நமது பத்திரிகைக்கு அனுப்பி வைத்த பிரத்தியேகச் செய்தியில் பின்வருமாறு கூறுகிறார்.

''உண்மையான தேசியத் தன்மைக்கும் அறிவுக்குமுள்ள அடையாளங்கள் என்னவெனில், சில பிரச்சினைகளுக்கு சில வேளைகளில் தீர்வே இல்லை என்பதை உணர்வதே. அத்தகைய ஒன்ருகவே இலங்கை இனப்பிரச்சினையும் உள்ளது. தமிழர்களுக்கு எதிரான சிங்களவரின் போக்கும், கடைப்பிடிக்கும் பாரபட்சமும், காட்டும் வெறுப்பும் அத்தகைய தீர்க்க முடியாத பிரச்சினையே. சிங்கள – தமிழ் இளைஞர்கள் இருசாராரையும் யார் பக்கமும் சாயக்கூடிய உதிரிகளாக்கி (lumpenization) சகல துன்பங்களுக்கெல்லாம் அராஜகத்தையே பதிலாகக் காண வைத்ததுமான செயலும், தீர்க்கமுடியாத இத்தகைய ஒரு பிரச்சினையே. கூடவே புவியியல் – அரசியல் காரணிகளால் இப்பிராந்தியங்களில் தன்னைத் திணித்துள்ள இந்தியாவினது செயலும் இத்தகைய தீர்வற்ற ஒன்றே.

இன்று தேவைப்படுவது நாகரிகமான நல்ல நடத்தை எது வென்று சிங்கள — தமிழ் மக்களுக்கு ஞாபகப் படுத்துவதே. இன்று நிலவும், சமுத்திரம் எனப் பெருகும் கொலைகளின் மத்தியில், ஒருவரது கையையாவது இரத்தக்கறை படாமல் வைத்திருக்க முயல்வதே...''

## தமிழ் மக்களைப் பாதுகாப்பவர்கள் யார்?

அமைதிப்படை விலகல் விவகாரத்தில் இன்று முக்கிய விஷயமாக அடிபடுவது, ஈழத் தமிழ் மக்களைப் பாதுகாப்பது பற்றியதே.

ஈழத் தமிழ் மக்களைப் பாதுகாப்பது, இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பே என ஜனதிபதி பிரேமாவும் அவரது அமைச்சர்களும் ஆணித்தரமாக அடித்துக் கூறுகின்றனர். ஒப்பந்தத்துக்கு இணங்க ஈழத்தமிழ் மக்களைப் பாதுகாப்பது தமது கடமையென்றும், அவர்களது பாதுகாப்புக்கு தக்க உத்தரவாதம் அளிக்காத பட்சத்தில் இந்திய அமைதிப்படை வெளியேறுவது முடியாத காரியம் என்றும், இந்தியா கூறுகிறது.

வட—கிழக்கு மாகாண அரசும் இவற்றுக்குச் சளைக்காது, தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

ஆனல் இத்தனைக்கும் மத்தியில் தமிழ் பேசும் மக்கள் வட–கிழக்குப் பகுதிகளில், நாளாந்தம் கொல்லப்பட்டுக்கொண்டே வருகின்றனர். வடமராட்சியில் தமிழ் மக்கள் சதா அழிவுக்கும் ஆபத்துக்கும் உள்ளாகி வருகின்றனர். அண்மையில் வல்வெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் பாரிய அழிவுகள் நடைபெற்றுள்ளன.

உண்மையில் தமிழ்மக்களைப் பாதுகாக்கப் போகிறவர்கள் யார் ?

திசை
THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்—ரூபா: 225/-
அரைவருடம்—ரூபா: 115/-

இந்தியா
ஒரு வருடம்—ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் — யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் — யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

# முன்பக்கச் செய்திகள்

''திசை ஒரு வித்தியாசமான பத்திரிகை.'' இது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்து. திசை 'பத்திரிகை' வடிவில் வெளிவரும் சஞ்சிகை.செய்திப் பத்திரிகைக்கும் (Newspaper) கருத்துப் பத்திரிகைக்கும் (Viewspaper) இடையில் நிறைய வேறுபாடு உண்டு. திசை வெறும் செய்திப் பத்திரிகை அல்ல. அது கருத்தாழம் மிக்க ஏடு.

சாதாரண செய்தியேட்டின் முகப்புச் செய்தி ஏனைய தினசரிகளின் செய்திகளோடு ஒப்பிடும் போது மக்களை ஈர்க்கக் கூடியதாக அமைந்து அவர்களைக் கவர வேண்டும். இதற்காகவே உணர்ச்சியூட்டும் கற்பனைச் செய்திகளை அலுவலகத்துக்குள் உருவாக்கி வெளியிட்டு, யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்று பரபரப்பூட்டி விற்பனையை அதிகரிக்க முயன்றது. பத்திரிகைக்குரிய 'பூட்கை' இல்லாமை இதற்குக் காரணமாகலாம்.

'திசை' மக்களுக்கு அறிவூட்டும் ஏடு. சாதாரண செய்தியின் பின்னணியை மக்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் கருத்தூட்டும் செய்திகளையே அது வெளியிட வேண்டிய கடப்பாடுடையது. இவ்வகையில் வார ஏடுகளான ஈழகேசரி, சுதந்திரன், செய்தி முதலியவை திசைக்கு முன்னோடிகளாகும். அவை தினசரிகளைப் பின்பற்றுமல் வாரத்தின் முக்கிய செய்தியைக் கருத்து நிலை நின்று முகப்புச் செய்தியாக வெளியிட்டன. திசையின் சகோதர ஏடான Saturday Review, அதன் நிறுவக ஆசிரியர் நடத்திய Sansoni Evidence என்பன திசைக்கு நல்ல முன்னோடிகள் என்பதையும் சுட்டிக் காட்டலாம்.

இவற்றின் சிறந்த முன்னுதாரணத்தைத் 'திசை' பின்பற்றுகிறது எனக் கருதுகிறேன். இது வரவேற்கத்தக்க நிலைபாடு.



## இழைகள்

உதாரணமாக, 11. 8. 1989 வெள்ளிக்கிழமை திசை இதழின் முகப்புச் செய்தி ''விலகல் சாத்தியமில்லை'' என்பது. தினசரி ஏடுகள் எல்லாம் ''விலகல் சாத்தியம்'' என்ற மாயையை உருவாக்கி மக்களை இருளில், கற்பனையில் உலவ விட்டிருக்கும் நேரத்தில் 'விலகல் சாத்தியமில்லை' என்ற தலைப்பு கவர்ச்சியாகவும் கருத்தை ஈர்ப்பதாகவும் யதார்த்த நிலையை உரைப்பதாகவும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. 'திசை ஒரு வித்தியாசமான பத்திரிகை' என்பதன் குறிகாட்டியாக இந்தச் செய்தி அமைந்துள்ளது. இது போலப் பல. நிதானமாக ஒப்பிட்டு ஆராயும் போது திசையைத் தேர்ந்து வாசிக்கும் தேர்ந்த வாசகனை இது திருப்திப்படுத்தும் என அறிய முடியும். இலவு காத்த கிளிகளாக அலையும் மக்களை இத் தலைப்புக் கவர்ந்திழுக்கும் என்பதில் ஐயமில்லை; திசையை வாங்கத் தூண்டும் என்பது உறுதி.

12. 8. 1989 திசை சிறுகதைப் போட்டிப் பரிசளிப்பு விழாவில் திசையின் ''கொட்டை எழுத்துச் செய்திகள்'' பற்றி வெளியான ஒரு கருத்து எனது உள்ளத்தில் ஏற்படுத்திய எதிர்வினையை மேலே தந்துள்ளேன். திசை தனது சரியான நிலைப்பாட்டில் நின்று முகப்புச் செய்தித் தலைப்பை மேலும் கவர்ச்சியாக்க வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

திசை சகோதர ஏடுகள், எழுத்தாளர்கள் பற்றிய விமர்சனங்களை வெளியிடும்போது மென்போக்கைக் கடைப்பிடிப்பது வரவேற்கத்தக்கது. திசை எழுத்தாளர்கள் இத்தகைய வேளைகளில் காரத்தைக் குறைத்து சாரத்தை மிகுவித்து எழுதுவது நல்லது. தேர்ந்த வாசகனை அது 'மெல்ல நக'வைக்கும்.

இவை உபதேசமல்ல. சொந்தக் கருத்துக்கள். இனப்பிரச்சினைக் கதை வரிசை நந்தியின் 'கேள்விகள் உருவாகின்றன' ஒரு புதுயுகத்துள் அடி எடுத்து வைத்துள்ளது. பொருத்தலைப்புப் பொருந்தாமல் போய்விடுகிறது!

பி. நடராசன்
யாழ்ப்பாணம்.

## ஏழை மாணவரைப் பாதிக்கும் விதி

நெல்லியடிப் பகுதியில் உள்ள ''அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட'' தனியார் கல்வி நிலையத்தில் நிகழும் அநியாயத்தைச் சுட்டிக் காட்ட இக்கடிதத்தை வரைகின்றேன். 'திசை' போன்ற பத்திரிகையின் மூலமாக அந்த அநியாயத்தை நீக்கலாம் என்ற எண்ணம் எனக்கு நிச்சயம் உண்டு.

நான் க. பொ. த. உயர்தர வகுப்பில் உயிரியல் பிரிவைச் சேர்ந்தவன். எனக்குத்தேவையான நான்கு பாடங்களையும் முழுவதுமாகவே அந்தக்கல்வி நிலையத்தில் படிக்க வேண்டுமென்றும், தனியாக ஒரு பாடத்தைப் படிக்க முடியாதென்றும் விதி விதிக்கப்பட்டுள்ளது. என்போன்ற ஏழை மாணவரே இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

நான் எனது சொந்த முயற்சியினால் ஓரிரு பாடங்களைக் கற்க முடியும். ஆனால் ஏனைய பாடங்களிற்கு கல்வி நிலையத்தையே நம்பியுள்ளேன். அங்கோ எமது பொருளாதாரக் கஷ்டத்திலும் முழுக் கட்டணத்தையும் செலுத்தவேண்டிய அவல நிலையில் உள்ளேன்.

மேலும், மீட்டல் வகுப்பு மாணவரைப் பொறுத்த வரையில் அவர்கள் முதல் ஆண்டில் ஒரு குறித்த பாடத்தில் அதிதிறமைச்சித்தி பெற்றுத்தேறியிருக்கலாம். அதனால் அவர்கள் மீண்டும் அப்பாடத்தைப் படிக்கவேண்டிய கட்டாயம், அவசியம் இல்லை. இக்கல்வி நிலையத்தைப் பொறுத்தவரை அவர்களும் சட்டாயப்படிப்புக்கு உட்பட வேண்டிய நிலை உள்ளது.

இது சிறுவிடயமல்ல. சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து, ஏழைகளின் கஷ்டங்களைப் புரிந்து தீர்க்கப்படவேண்டிய விடயமாகும். ஆனால் இந்தக் ''கட்டாய விதி'', விளக்கிக் கூறியும் தளர்த்தப்படவில்லை. என் போன்ற ஏழைகளின் சார்பில் இதைப் பிரசுரிக்குமாறு வேண்டுகின்றேன்.

பொ. தேவகுமார்
அல்வாய்.

## இதற்கு முன் என்ன செய்தார்கள்?

'திசை'யில் எழுதிவரும் எழுத்தாளர்கள் பற்றி நான் முன்னர் அறியவில்லை. ஆழம் மிக்க கருத்துக்களுடன்கூடிய ஆக்கங்களை எழுதும் இவர்கள், தூங்கிக் கொண்டா இருந்தார்கள்? திசையில் வெளிவரும் கார்ட்டூன்கள் தனித்துவமானவை. யதார்த்த பூர்வமான கருத்துக்கள் இதன் மூலம் பசுமரத்தாணிபோல் பதிகின்றன. அது சரி, தற்போது திசையில் அறிவியல் உலகம், சமூகம், ஒரு பிடி விசாரம், பொருளியல் ஆய்வு போன்றவை வெளி வருவதில்லையே ஏன்? 'உருளும் உலகில்' சண்முக வடிவேலின் பணி தொடரட்டும். தேசிய இனப் பிரச்சினைக் கதைகள் தரமானவை. ஆக்கங்களில் இடம் பெறும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்களுக்கு நன்றி.

அ. அ. தயான்
ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

# யார் அந்த அனுமான்!?

சண்டேரைம்ஸ் பத்தி எழுத்தாளர் ராமாயணத்துக்கு புதிய விளக்கம் ஒன்றை கதையாகச் சொல்கிறார்.

முன்னைய ராவணன் ஆட்சியின் போது இந்த அனுமான் இலங்கைத் தோட்டப்பகுதியில் செல்வாக்கும் சக்திமிக்கவராகவும் இருந்தாராம். பின்னர் அவன் தம்பி விபீஷணன் காலத்திலும் தான் சக்திமிக்கவர் என்பதை நிரூபித்திருக்கிறாராம். இராவணன் ஆகாயமார்க்கமாக சீதையை இலங்கைக்கு கொண்டு வந்தாலும். ஆனால் அவன் தம்பி விபீஷணன் சீதையை இலங்கையிலிருந்து அப்புறப்படுத்தி தன்னுடைய மக்களின் கௌரவத்தைப் பேண விரும்பினாலும். ஆனால் ராமன் தன்னுடைய அம்மாவைவிட ஆணவக்காரனாக இருந்ததால் இதற்கு உடன்பட மறுத்தாலும்.

உடனே 'அஞ்சனமை' போட்டுப்பார்த்த அனுமான் விபீஷணன் அரண்மனையில் இராமனோடு யுத்தத்துக்கு நின்ற இரண்டு இளவரசரை இராமனைச் சந்தித்துக் கதைப்பதற்கு அனுப்பினாலும். இது பெரும் வெற்றியாகக் கொண்டாடப்பட்டதாம். ஆனால் உண்மையில் அந்தப் பேச்சு வார்த்தை எதையும் சாதிக்க வில்லையாம்.

ஆனாலும் அனுமான் அழிவு ஏற்படாமல் தடுத்த தனது சாதனையால்திருப்தியுற்றாலும். ராவணன் மாதிரி விபீஷணனும் இவனது முக்கியத்துவத்தை உணருவானாம். இராவணன் காலத்தில் அனுமானின் இனத்தவர்கள் 4 லட்சம் பேர் இலங்கைப் பிரஜைகள் ஆனார்களாம். □

# தாஜிஸ்தானில் சத்யஜித் ரே மன்றம்

சோவியத் தாஜிஸ்தான் குடியரசில் கடந்த இரண்டாண்டுகளாக சத்யஜித் ரே மன்றம் இயங்கி வருகிறது. தாஜிக் சினிமா ஊழியர்கள் சங்கத்தில் இந்த மன்றம் அமைந்திருக்கிறது. அண்மையில் இந்த மன்றத்தின் கூட்டம் துஷான்பேயில் உள்ள சினிமா ஊழியர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அங்கு திரையிடப்பட்ட சத்யஜித் ரேயின் பதேர் பாஞ்சாலி படத்தைக் காண்பதற்காகவும் அது குறித்து விவாதிப்பதற்காகவும் தாஜிஸ்தானின் பிரபல திரைப்பட இயக்குநர்கள், விமர்சகர்கள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், செய்தியாளர்கள் என நிறையப்பேர் திரண்டனர்.

''ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்திய சினிமாவின் ரசிகர்கள் எங்கள் குடியரசில் கலந்துரையாடல் கூட்டங்களை ஏற்பாடு செய்தனர். அதே காலகட்டத்தில் சோவியத் சினிமாவின் ரசிகர்களால் செர்ஜி ஐஸன்ஸ்ரைன் மன்றம் கல்கத்தாவில் அமைக்கப்பட்டது. சத்யஜித் ரே அதன் கௌரவ தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுவே தாஜிஸ்தானில் சத்யஜித் ரே மன்றத்தை ஆரம்பிப்பதற்கு தூண்டுகோலாக விளங்கியது'' என்று திரைப்பட இயக்குநர் மார்கரிதா காசிமோவா தெரிவித்தார். □

# பாதசாரிகள் தினம்

ஜோர்ஜியாவின் தலைநகரான திபிலிசியில் ஜூலை 12 என்பது, ''பாதசாரிகள் தின''மாகப் பிரகடனம் செய்யப்பெற்றுள்ளது. இனிமேல் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது புதன்கிழமையன்று, திபிலிசியிலுள்ள 15 லட்சம் மக்களும், பொதுப் போக்குவரத்தையே பயன்படுத்தவேண்டும்; சொந்தக்கார்களையோ, அரசாங்கக் கார்களையோ பயன்படுத்தக்கூடாது. ஏனெனில், திபிலிசியின் காற்று மண்டலம் மாசடைவதற்கு முக்கிய காரணம், மோட்டார் வாகனங்களேயாகும். திபிலிசியில் 1,50,000க்கும் அதிகமான மோட்டார் வாகனங்கள் உள்ளன; ஆண்டுதோறும் 7,000–8,000 என்ற விகிதத்தில், அவற்றின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

நகரத்தின் காற்று மண்டலம் மாசடையாமல் இருப்பதற்கு, ஒரு மாதத்தில் ஒரு நாளை ஒதுக்கவேண்டும் என்று ஜோர்ஜியாவின் விஞ்ஞானிகளும், பொது மக்களும், அதிகாரிகளும் கருதுகின்றனர்.

# பனைவளத்தின் நன்மை

''எமது ஈழப்பிரதேசத்தின் பனைவளத்தை மூலப்பொருளாக்கி, அதைச் சார்ந்து வாழுகின்ற சீவல்தொழிலாள மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டினை உருவாக்கவும், இந்நாட்டின் பொருளாதாரத்தின் ஒரு பகுதியைப் பெற்றுக் கொடுக்கவும் வேண்டி உருவாக்கப்பட்டதே இந்தப் பனை அபிவிருத்திச் சபையாகும்''. இவ்வாறு கடந்தவாரம் சாவகச்சேரி தெய்வேந்திரா படமாளிகையில் சீவல் தொழிலாளர் கலந்து கொண்ட கூட்டத்தில், ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் அமைப்பாளர் திரு. அ. இராசலிங்கம் கூறினார்.

மேலும் அவர் பேசியபோது, பனை வளத்தின் பெரும் உபயோகமும் அதனால் பெறக்கூடிய பன்முகப்பட்ட வேலை வாய்ப்பும் எடுத்துக்கூறப்பட்டது.

# "மரணதண்டனை முறையை ஒழியுங்கள்"

## மன்னிப்புச் சபை கோரிக்கை விடுகிறது!

சர்வதேச மன்னிப்புச் சபை, எல்லா வகையான மரண தண்டனையையும், புறநடையின்றி எதிர்க்கிறது. அது சிறைக்கைதிகள்பால் கொண்டுள்ள ஈடுபாடுகளில் இது ஒன்று.

'மனச் சாட்சியின் கைதி'களை அது விடுதலை செய்யக் கோருகிறது. இவர்கள் தம் நம்பிக்கை – நிறம், பால், இனத்தொன்மை, மொழி அல்லது மதம் — காரணமாக வன்செயல்களைத் தூண்டியவராகவோ, பயன்படுத்தியவராகவோ உலகின் பல பாகங்களிலும் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மன்னிப்புச் சபை எல்லா அரசியல் கைதிகளுக்குமாக, உரிய நீதியான விசாரணையைக் கோரி நிற்கிறது.

மரண தண்டனையையும் மனிதத் தன்மையற்ற அல்லது தரக் குறைவாக எவரையாவது நடத்துவதையும் அல்லது தண்டிப்பதையும் எதிர்க்கிறது.

### மனித தரத்தை மீறல்

அனைத்து, சர்வதேச மனித உரிமைகள் பிரகடனங்கள், மாநாடுகள், பிரேரணைகள் யாவும் ஒவ்வொருவரும் வாழவும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்புக்கும் உரிமை உள்ளவர்கள் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றன. சட்டரீதியாக மரணதண்டனை விதிக்கப்படுமிடத்து அந்தந்த நாடுகளில் மரண தண்டனையை நீக்குவது விரும்பத்தக்கது; அது தொடர்பான குற்றச் செயல்கள் முன்னேற்றமான வகையில் குறைக்கப்படல் வேண்டும். இது ஐ. நா வின் உத்தியோக பூர்வ நிலை.

மனிதத் தன்மைக்கு மாறானது மரண தண்டனை என்பதால், சர்வதேச மன்னிப்புச் சபை அதனை நீக்கக் கோருகிறது. ஒரு கைதிக்கு மரண தண்டனை அளிக்க என்ன காரணத்தை அரசு சொன்னாலும், மரணதண்டனையை மனித உரிமைகளுக்கான இயக்கப்பாடுகளிலிருந்து பிரிக்க முடியாது என்பதே எமது நிலை.

### ஒழித்தலை நோக்கி

பல அரசுகள் மனித உரிமைக்கு எதிரானது மரண தண்டனை என்பதை ஏற்றுக் கொண்டுள்ளன. ஐ. நா. வும் மரண தண்டனையை ஒழிக்க வேண்டுமென பிரகடனம் செய்துள்ளது. இன்று 35நாடுகள் மரண தண்டனையை ஒழித்து விட்டன. மற்றும் 18 நாடுகள் இத்தண்டனையைத் தவிர்த்துக் கொண்டன, போர்க்காலக் குற்றங்கள் போன்ற சில புறநடையாக. மற்றும் 27 நாடுகளும் பிரதேசங்களும் இப்பொழுது மரண தண்டனையை நிறைவேற்றுவதில்லை. ஆக, 80 நாடுகள் வரை—உலக நாடுகளில் 40 வீதமானவை — மரணதண்டனையை, சட்டத்தில் அல்லது நடைமுறையில் ஒழித்து விட்டன.

இரண்டாம் உலகப் போரிலிருந்து, மனித உரிமைகளுக்கான இயக்கம் வளர்ந்த போது மரண தண்டனை ஒழிப்புக்கான குரல்கள் எழுந்தன. கடந்த தசாப்தத்தில் சராசரியாக ஆண்டுக்கு ஒரு நாடு எல்லா குற்றங்களிலும் மரண தண்டனையைத் தவிர்த்து வந்தது.

---

□□ வளவன் □

---

மரண தண்டனையை ஒழிக்கும் அரசியல் விருப்பம், இறுதியாக நாட்டின் உள்ளிருந்தே தோன்றும். அதனை அகமுறுத நாடுகளை சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகள், வற்புறுத்தி நிற்கின்றன. மரண தண்டனையை நிறுத்திய நாடுகளில், அத்தண்டனை அவசியமில்லை, விரும்பத்தக்கதல்ல என்பதற்கு பல சான்றுகளைத் தருகின்றன. ஆனால் மரண தண்டனையை நிறுத்தியதால் எழுந்துள்ள குற்றவியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அந்தந்த நாட்டு மக்களும் தலைவர்களும் கலந்து முடிவெடுக்க வேண்டும்.

சில இடங்களில் இத்தடை மிக விரைவாகவே வந்துவிடும். திடீர் அரசியல் மாற்றங்கள் மனித உரிமைகளை மேம்படுத்த புதிய வாய்ப்புகளை உருவாக்கி விடலாம். ஆர்ஜன்ரீனா, பிறேசில், ஹைத்தி, நிகராகுவா, பேரு, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் கடந்தகால அரசியல் நெருக்கடிகளிலிருந்து வெளியேறியபின், மரணதண்டனையை நிறுத்திக் கொண்டன. ஏனைய இடங்களில் துணிவுடைய அரசியல் தலைமையும், நீண்ட ஆலோசனைகளும் காலத்தை வீணாக்கின. இவ்விடயத்தில் தனிமனிதன், பொதுநல அமைப்புகள், செல்வாக்குள்ள தலைவர்கள் எல்லோருக்கும் முக்கிய பங்களிப்பு உண்டு.

### தனித்துவமானதல்ல

1988இல், ஐ நா. வுக்காக நடத்தப்பட்ட ஆய்வொன்றின்படி, ஆயுட் தண்டனையை விட மரணதண்டனை பெரும் பயமுறுத்தலும் தாக்கமுடையதும் என்பதற்கு, விஞ்ஞான பூர்வ காரணம் காட்டப்படவில்லை. அத்தகைய நிருபணம் உருவாதல் சாத்தியமில்லை என்று தெரிகிறது.

யார் வாழவேண்டும், யார் சாகடிக்கப்பட வேண்டும் எனத் தேர்ந்தெடுப்பதில் எந்த குற்றவியல் முறைகளும் பொருத்தமாகவும், நீதியானதாகவும் இல்லை. மரண தண்டனைபயன்படுத்தப்படும்போது சிலர் கொல்லப்படுகிறார்கள். அதே குற்றத்தை அல்லது அதைவிடப் பயங்கரமான குற்றத்தைப் புரிந்தவர் வாழ அனுமதிக்கப்படுகிறார் என்பதை, அனுபவம் காட்டுகிறது.

மரண தண்டனையின் யதார்த்தம் விநோதமானது. யார் மரண தண்டனைக்கு ஆளாகிறார்கள்? யார் விடுதலை பெறுகிறார்கள் என்பது குற்றத்தின் தன்மையால் மட்டும் தீர்மானிக்கப்படுவதல்ல. ஆனால் இன, சமூகப் பின்னணியையும் பார்த்து தீர்மானிக்கப்படுகிறது.

விமர்சனத்திற்கு இடமளிக்கும் பாரபட்சப் போக்கும், தவறுகளும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். நீதியான தீர்ப்பளிப்பதில் வறுமை, வர்க்கம், இனம் பெருமளவு தாக்கத்தைப் பெறும். விசாரணையின்பெறுபேற்றைத்தீர்மானிப்பதில் நல்ல சட்ட ஆலோசனை பெறும் வாய்ப்பு முக்கியமான ஒன்றாக எழுகிறது. பணக்காரன், அரசியல் செல்வாக்குடையவன், ஆதிக்கம் செலுத்தும் இனத்தவர், மதத்தவரும் மரண தண்டனை பெறும் சாத்தியம், ஏனைய அரசியல் எதிர்ப்பாளர்கள், ஆதரவாளர்கள், வறியவர்கள், பிரபலமற்ற இனத்தவர், மதத்தலைவர் ஆகியோரிலும் பார்க்கக் குறைவு.

சர்வதேச மன்னிப்புச்சபை –

இன்றும் மரணதண்டனையை நடைமுறைப்படுத்தும் எல்லா நாடுகளையும், எல்லாக் கொலைகளையும் உடனடியாகவும், நிரந்தரமாகவும் நிறுத்தவும், விதிக்கப்பட்டுள்ள எல்லா மரண தண்டனையையும் வேறு வித தண்டனையாகக் குறைக்கவும், சட்டரீதியாக மரண தண்டனையை ஒழிக்கவும் கோரி நிற்கிறது.

உதவி: சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரசுரம் □

---

# மத்திய அரசு - மாகாண அரசு:

## இலங்கை அரசுக்கு வித்தியாசம் தெரியவில்லை!

'முதலமைச்சர்' அ வரதராஜப்பெருமாள் 'சண்டேரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் சில பகுதிகள், இங்கே தரப்படுகின்றன.

**கேள்வி:** மாகாண அரசு சம்பந்தமாக மத்திய அரசு கடைப்பிடிக்கும் கொள்கைகளில் ஏதாவது மாற்றம் செய்யவிரும்பினால், அவை எவையெனக் கூறுவீர்களா?

**பதில்:** 13ஆவது திருத்தச்சட்டம். இது மாகாண அரசு செயற்படுவதற்குத் தடையாக உள்ளது இன்னும் 70% மான அரசியல் அமைப்புச் சட்டங்கள் மாற்றப்பட வேண்டும்.

**கேள்வி:** இது சம்பந்தமாக இலங்கை அரசோடு நீங்கள் கதைக்கவில்லையா?

**பதில்:** இது சம்பந்தமாக இலங்கை அரசு எதையும் விளங்கிக் கொண்டதாக இல்லை. என்னைத் திருகோணமலையில் மூன்று இலங்கை அரசாங்க அமைச்சர்கள் சந்தித்தார்கள், அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவுக்கு அதிகாரப் பரவலாக்கம் பற்றியோ அல்லது தற்போது தமிழ் நாட்டில் அதிகாரத்தில் உள்ள கட்சி, தமிழ்நாடு மாநில அரசு என அழைக்கப்படுகிறது என்பது பற்றியோ எதுவும் தெரியாது

**கேள்வி:** அந்தச் சந்திப்பின் பலாபலன் என்ன?

**பதில்:** இது சம்பந்தமான ஆலோசனை ஒன்றைத் தயாரிக்கும்படி அவர்கள் என்னைக் கேட்டுள்ளார்கள், அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடக்கும்.

**கேள்வி:** உங்கள் ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படுமா? இலங்கை இந்திய ஒப்பந்தமே இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லையே?

**பதில்:** நடைமுறைப் படுத்தப் படாவிட்டால் ஐக்கிய இலங்கையை அவர்கள் விரும்பவில்லை என்பதே அர்த்தம்.

**கேள்வி:** இலங்கைத் தலைவர்கள் ஐக்கிய இலங்கையை விரும்பவில்லை என்று எப்படிக் கூறுவீர்கள்?

**பதில்:** இன்னும் இலங்கை அரசு ஒப்பந்தத்தையே நிறைவேற்றவில்லையே ...... அதனால்.

**கேள்வி:** ஏன் இன்னும் மாகாண அரசு நிலை கொள்ளாமல் இருக்கிறது?

**பதில்:** மத்திய அரசு பழைய மாகாண எல்லைகளை புதிய மாகாண சபைகளின் எல்லையாக கொண்டுள்ளதால் ஏற்பட்ட சிக்கல் இது. அதனால் கொழும்பு போன்ற பெரிய நகரங்களும் மாகாணசபையின் நிர்வகிப்புக்குள் வருவதால், மத்திய அரசு தனக்கு அதிகாரம் எதுவும் இல்லாமல் போய் விடும் என்று பயப்படுகிறது

**கேள்வி:** அப்படியானால் மாகாண சபைகளுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்று கூறுகிறீர்களா?

**பதில்:** ஆம்! அநேகமான கூட்டுத் தாபனங்களைக்கூட எம்மால் நிர்வகிக்க முடியாமல் இருக்கிறது. காரணம் இவையெல்லாம் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் கீழ் வருவன என்பதால் மத்திய அரசால் நிர்வகிக்கப்பட வேண்டியவையாம்!

**கேள்வி:** ஏன் இந்தச் சிக்கல் எழுந்துள்ளது?

**பதில்:** காரணம் இன்னும் நமது இலங்கை அரசுக்கு, இந்திய மாநில அரசும் மத்திய அரசும் இயங்கும் முறைபற்றியோ, அவற்றின் நிர்வாகப் பகிர்வு பற்றியோ எதுவித பரிச்சயமும் இல்லை. கொழும்பு அரசு, மாகாண அரசு என்பது அதிகாரப் பரவலாக்கத்தை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டது என்பதை இன்னும் உணரவில்லை! □

---

# அண்மையில் கொழும்பில், கடைகள் ஏன் எரிந்தன?

அண்மையில் ஐந்துலாம்படிச் சந்தியில் உள்ள ஒரு பெரிய கடைத்தொகுதி எரிந்து சாம்பலாகிய செய்தி யாவரும் அறிந்ததாகும். இது ஏன் எரிந்தது? இதன் பின்னணி என்ன? என்பன பற்றி பல கிசு கிசுக்கள் அடிபடுகின்றன.

கொழும்புப் பகுதியிலுள்ள அநேகமான கடைகளும் வீடுகளும் அலுவலகக் கட்டிடங்களும் சிங்கள மக்களுக்குச் சொந்தமாய் இருக்க, அதில் வசிப்பவர்களும், அதில் வியாபாரம் செய்பவர்களும், தமிழர்களாகவும் முஸ்லிம்களாகவும் இருப்பதால் அவர்களை இடத்தைவிட்டு எழுப்புவது பெரிய பிரச்சினையாக சிங்களவர்களுக்கு இருந்து வந்துள்ளது. நீதிமன்றத்தில் வழக்குப்போட்டாலும், நீதிமன்றச் சட்டம் குடியிருப்பாளர்களுக்கே சாய்வாக இருப்பதால் அதிலும் அவர்கள் தோல்வியே கண்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினை அரசாங்கத்தின் கவனத்திற்கும் எட்டியிருந்ததால் 1983 இல் இனக் கலவரத்தால் ஏற்பட்ட அனர்த்தங்களை, அரசாங்கம் இதற்குச் சாதகமாகப் பயன்படுத்தியது. அன்று வீடமைப்பு அமைச்சால் கொண்டுவரப்பட்ட புதிய சட்டம், இதற்குக் கைகொடுத்தது. அதன்படி, வாடகைக்குக் கொடுக்கப்பட்ட வீடோ கடையோ அதன் கூரை எரிந்து விழுந்து விட்டால் அதை மீண்டும் கட்டும் பொறுப்பு அதன் நிலச் சொந்தக்காரருக்கே உரியதாகும் என்பதே அது. 1983 ஆம் ஆண்டு திட்டமிட்டு எரிக்கப்பட்ட கட்டிடங்கள் அதன் நிலச் சொந்தக்காரருக்கு இசனால் கைமாறிற்று.

---

யாழ். குருவி

---

இப்பின்னணியிலேயே அண்மையில் எரிந்து சாம்பலாகிய ஐந்துலாம்படிச்சந்திக் கடைத்தொகுதியையும பார்க்கவேண்டும் என்று, கதைகள் அடிபடுகின்றன. இக்கட்டிடங்களுக்குச் சொந்தக்காரர் பெரிய புள்ளி என்றும், இவர் இக்கட்டிடங்களை இடித்துக் கட்டி பெரிய அளவில் நகை வியாபார மாளிகை ஒன்றை ஆரம்பிக்க இருந்தாராம். ஆனால் இவ்விடங்களில் நிலைகொண்டிருந்த வியாபாரிகளை அவ்விடங்களை விட்டு எழுப்புவதற்கு இவர் படாதபாடு பட்டுக்கொண்டிருந்த வேளையிலேயே இத்தீவிபத்து நேர்ந்துள்ளதாம். இத் தீவிபத்தின் பின்னணி எதுவோ? □

# மரணம் பற்றிய நினைவுகள்

யக்ஷ வினா : ''உலகில் பெரிய அதிசயம் எது ?''
தர்மபுத்திரர் விடை : தினம் தினம் மனிதர் மரித்துக்கொண்டிருக்கவும் மனிதன் அதுபற்றிச் சிந்தியாதிருக்கிறானே! அதுதான் பெரிய அதிசயம்''.

— மகாபாரதம்
— நச்சுப் பொய்கைச்சருக்கம்

மரணம் அனைவரது வாழ்விலும் நிச்சயமாக ஒருநாள் குறுக்கிடும். நாம் ஒவ்வொருவரும் அதனை ஒருநாள் சந்திக்கப் போகிறோம். ஆயினும் எவரேனும் அதன் மர்மத்தை அறிய முயலுவதில்லை.

— கபிரியேல் மாசல் பற்றிய நூலில்
டொமினிக் அ. ஜோஸப் அடிகளார்

டொக்ரர் மைக்கல் சபொம் உதவி மருத்துவப் பேராசிரியராக எமொரி பல்கலைக்கழகத்தில் பணிபுரிகிறார். இதயநோய் சிகிச்சையில் பெயர்பெற்ற அறிஞர், மரணத்தின் எல்லையை அணுகி மீண்டவர்கள் கூறிய அனுபவங்களைத் தம்மருத்துவசேவைக் காலத்தில் தொகுத்தாராய்ந்து சென்ற ஆண்டு ஒரு நூல் வெளியிட்டார். அதில் சொல்லப்படும் கருத்துகள் நம் கவனத்திற்குரியது.

1970 இல் நான் புதிதாக வெளிவந்த வைத்தியனுக்குரிய பயிற்சியை புளொரிடா பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்தேன். இரவு 3. 15 மணிக்கு ஆபத்து நிலை நோயாளி ஒருவனின் கட்டிலடிக்கு அழைப்பு வந்தது. அதற்குமுன் மரணம்பற்றி நான் அதிகம் சிந்தித்தது கிடையாது. கோவிலுக்குப் போகும் பழக்கமுள்ள குடும்பத்தில் பிறந்தாலும் நான் சமய, விஞ்ஞானக் கருத்துகளைத் தனித்தனியே பிரித்துவைத்துக் கொண்டேன். மரணம்பற்றிய சமய சிந்தனை மனிதன் நல்லவனாய் நடக்கவும், சாவுபற்றி வீணாக அலட்டிக் கொள்ளாதிருப்பதற்கும் உதவுவதேயன்றி அது வேறு பயனளிக்காது என நினைத்திருந்தேன்.

விஞ்ஞான முறைகளைக் கையாண்டு ஆய்வுகூடங்களில் கஷ்டப்பட்டு உலகின் அவிழ்க்க முடியாத சிக்கலெதையும் அவிழ்த்து விடலாமென்ற முழுநம்பிக்கை எனக்கு இருந்தது. விளக்கமுடியாத விடயம் என்று ஒன்றில்லை. விஞ்ஞான உண்மைகள் நாம் தேடிக் கண்டறியும் பொருட்டு மறைவில் காத்து நிற்கின்றன என்ற நினைப்பு என்னுள் வலுவாக வேரூன்றியிருந்தது.

1976 இல் டொக்ரர் றேய் மண்ட்மூடி எழுதிய (உலக) ''வாழ்வுக்குப் பின் வாழ்வு'' என்ற நூல் என் கையில் கிடைத்தது. சாவை நேருக்கு நேராகச் சந்தித்த சிலரது அனுபவங்களை அதில் பேசியிருக்கிறார். எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால் நண்பருக்காக இது சம்பந்தமான நேரடி அனுபவங்களைத் தொகுக்க உடன் பட்டேன்.

சலாசய நோயாளி ஒருவரிடம் விசாரித்தேன். தனது மரணவாயில் அனுபவத்தை அப்பெண் வருணித்தாள். நான் நூலில் கண்ட வருணனையுடன் அது ஒத்திருந்தது. அந்த உரையாடலின் இறுதியில் நான் சிறிதும் அறியாத ஒரு துறையில் புது அறிவு பெற்ற திருப்தி ஏற்பட்டது. இருநோயாளரின் அனுபவங்களை நாடாப்பதிவு செய்தோம். அந்த அனுபவம் கொடுத்த புத்துணர்வும்

**ஆ. சபாரத்தினம்**

வாழ்வு பற்றிய புதுநோக்கும் அவர்களுக்குத்தாம் உயிருடன் இருப்பதிலும், கூடிய மகிழ்வைத் தந்தது.

இத்துறையில் விஞ்ஞான ரீதியான ஆய்வு ஒன்றை மேற்கொள்ள விரும்பினேன். ஆறு வினாக்கள் தயாரித்து, நிச்சயமாக வைத்திய ரீதியில் ஆபத்தான நோயுற்றவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களது கல்வி, சமய நம்பிக்கைகளை விசாரித்து, அவை அவர்களது அனுபவங்களுக்கு மறைமுகமான தூண்டுதலாயிருக்குமோ என நிச்சயித்து, அனுபவங்களைப் பதிவு செய்ய வேண்டியதாயிற்று.

மரணத்தைத் தழுவியவர்கள் தமது உடலின் அருகில் நடந்த விடயங்களைக் கூறுவதுண்டு. கண்ணால் நேரே கண்டவிதமாக வருணனைகள் இருக்கும். நோயாளியோ அறிவு அற்ற நிலையில் இருந்து கொண்டு புலனறிவால் கண்டது போல் வருணிப்பது எப்படி? என்ற வினா என்னைவியப்பில் ஆழ்த்தியது. இதயத் துடிப்பு தற்காலிகமாய் நின்றுவிட்ட நூற்றுக்கணக்கான நோயாளிகளிற்கு நான் மீண்டும் இதயம் துடிக்கச் செய்துள்ளேன். அவர்களில் யாராவது சாவு அனுபவத்தைக் கூறும்போது, படித்த அறிவால் ஊகித்துக் கூறுகிறார்களா இல்லையா என்பதை, நான் பயிற்சி பெற்ற இதய நோய் நிபுணன் என்ற முறையில் அறிந்து விடலாம். ஒரு உளவியல் நோய்ச்சிகிச்சைச் சமூக சேவையாளரின் துணையுடன் இவ்வாய்ப்பை மேற்கொண்டேன்.

116க்கு மேற்பட்ட நோயாளரைத் தேர்ந்தெடுத்துப் புள்ளி விபரவியல் அடிப்படையில் அவர்களைத் தரம்பிரித்து, மிக நுட்பமாக விஞ்ஞான முறைகளுக்கு மாறின்றிப்பதிவு செய்த விபரங்களின் பயனாக, 300 பக்கங்கள் கொண்ட நூலை அவர் எழுதியுள்ளார். 1. ''சாவுக்கு அண்மையான அனுபவத்தின் பொதுத்தன்மைகள்'' என்பது அதன் தலையத்தியாயம். 2. Autoscopic near death experience 3. அதீத நிலை அனுபவம் 4. தரவுகளின் பகுப்பாய்வு 5 சத்திரசிகிச்சை அனுபவங்கள் 6. Antoscopic அனுபவங்கள் உண்மையா? கற்பனையா? 7. 'பின்னிலை அனுபவங்கள்'' 8 மீள மீள வரு (Autoscopic encounters) சந்திப்புகள் 9. சாவு அண்மையனுபவத்தின் சிக்கல்கள் 10. விளக்கங்கள் 11. சாவு அண்மையனுபவத்தின் பொருள் பற்றிய நினைவுகள் என்ற 11 தலைப்புகளில், அந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

மனிதனின் இயற்கை, இறப்பின் போக்கு, மருத்துவம் செய்யும் முறை ஆகிய விடயங்களில் புதிய அடிப்படையில் சிந்திக்கும் காலம் வந்துவிட்டது. இவ்வாராய்ச்சியில் ஈடுபடும் போது ஏற்படும் வியப்பு உணர்ச்சியும், அச்சமும், மரியாதையும் வாழ்வின் சாரம் என்ன, கருத்து யாது என்ற வினாக்களுக்கு விடை தேடும் முயற்சியைத் தூண்டுகின்றன.

லண்டனில் $1\frac{1}{2}$ பவுண் விலை போட்ட இந்நூல் விஞ்ஞான மனப்பாங்குடையவர்கள் அனைவரும் வாசிக்கத்தக்கது. □

## இலங்கையில் சோழர் ஆட்சி

சோழர்களுடைய ஏகாதிபத்தியமும் வர்த்தகமும் தமிழ் நாட்டின் பண்பாட்டை வெளியே பரப்புவதற்கு உதவின. இதனால் இலங்கையில் சோழர் ஏகாதிபத்தியம் பரவியபோது அவர்கள் வளர்த்த பண்பாடும் கூடவே பரவியது. பத்தாம் நூற்றாண்டின் இறுதிக் காலில் ராஜராஜன் வட இலங்கையைக் கைப்பற்றிப் பொலன்னறுவையை இராஜதானியாக்கினான். இந்நகருக்கு ஜனநாதமங்கலம் என்ற புதிய பெயரும் இடப்பட்டது. ரஜேந்திரசோழன் 1017 இல் முழு இலங்கையையும் அடக்கிப் பேரரசின் ஆட்சியை அங்கு உறுதிப்படுத்தினான். சோழர்களுடைய ஆட்சி இலங்கையில் 1070 வரை நீடித்தது.

— வளவன்

நன்றி: இலங்கையில் திராவிடக் கட்டடக்கலை □

# இங்கிலாந்து அணியின் தென்னாபிரிக்க விஜயம்

தென்னாபிரிக்கா மீண்டும் உலக விளையாட்டரங்கை ஒரு கலக்குக் கலக்கியுள்ளது. இங்கிலாந்தின் பிரபல 16 வீரர்கள் ஒரு குழுவாக்கப்பட்டு 1990ஆம் 91ஆம் ஆண்டுகளில் தென்னாபிரிக்காவில் விளையாடப் போகிறார்கள்; இவர்களுக்குத் தலா 80 000 பவுண்களுக்கு மேல் ஊதியமும் வழங்கப்படவுள்ளது உலக கிரிக்கட் சபை தென்னாபிரிக்கா செல்லும் வீரர்களுக்கு விதிக்கும் 5 வருட தடையுத்தரவையும் மீறி இவ்வீரர்கள் செல்வதற்கு, தெரிவுக்குழுவுடன் உள்ள அதிருப்தியும் ஒரு காரணம் எனக்கருதப்படுகிறது. இத்துடன் இங்கிலாந்தின் றக்பிக்குழு (Rugby) ஒன்றும் இம்மாத இறுதியில் தென்னாபிரிககாவிற்குச் செல்கிறது. இவையெல்லாம் உலக நாடுகளின் பலத்த எதிர்ப்பை இங்கிலாந்துக்குப் பெற்றுத்தந்துள்ளது. இவை நியூசிலாந்தில் 90 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப்போட்டிகளை பாதிக்கக்கூடும். தென்னாபிரிக்காவின் நிறவெறியை ஆதரிக்கும் இங்கிலாந்தை எதிர்த்து, 1986 ஆம் ஆண்டில் எடின்பரோவில் நடந்த போட்டிகளைக் கறுப்பின ஆபிரிக்க நாடுகள் பகிஷ்கரித்தன. இம்முறையும் பல உலக விளையாட்டுத்தலைவர்கள், இவ்விஜயத்தை ரத்துச் செய்யுமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அடுத்து குழுவின் வீரர்களைச் சற்று ஆராய்ந்தால், சமீபகாலத்தில் பிரபல்யமான இவ்வீரர்கள் குழுவானது அவுஸ்திரேலியாவுடன் ஆடும் குழுவைவிட பலமானதாகத் தெரிகிறது. தற்போதைய திறமைமிக்க தலைவர் என்று எல்லோராலும் வர்ணிக்கப்பட்டு, பெரும் சர்ச்சைகள் காரணமாக அணித்தலைமை பறிக்கப்பட்ட மைக் காட்டிங் என்பவரே அணிக்குத் தலைமை தாங்குகிறார் 1957 யூன் மாதம் 6 ஆம் திகதி பிறந்த பலமான உடலமைப்பைக் கொண்ட — காட்டிங் அசாதாரண துணிச்சலும் சிறந்த மதிநுட்பமும் படைத்தவர். உலகின் அதிவேகப் பந்து வீச்சாளர்களை தவிடு பொடியாக்கும் நடவடிக்கையில், 1986 ஆம் ஆண்டு ஜமேக்காவில், உலகின் அதிவேக பந்து வீச்சாளர் மல்கம் மார்ஷலின் பந்தினால் மூக்கு உடைபட்டு, செயற்கை மூக்குப் பொருத்தப்பட்டார். சமீப காலத்தில் இங்கிலாந்தை வெற்றிப் பாதைக்குப் பலமுறை இட்டுச் சென்றார். இந்திய அணியினுடனான ஆட்டத்தில்பெற்ற இரு இரட்டைச்சதங்கள் அவரது பொறுமைக்கும் திறமைக்கும் சான்று பகர்கின்றன. இவ்வாறு தனது வாழ்வின் உச்சியில் வெற்றிக் களிப்புடன் மிகுந்த காட்டிங்கிற்கு 20 மாதங்களுக்கு முன், பாகிஸ்தானில் சோதனைக்காலம் ஆரம்பமாயிற்று.

பாகிஸ்தானின் நடுவர் சாகூர் ராணாவுடன் ஒரு முடிவு குறித்த சர்ச்சையில், ஆட்டம் தடைபட்டது. இதில் காட்டிங் நடுவரை 'மோசக்காரன்'' (Cheat) என அழைத்தாராம். நடுவரில்தான் பிழையிருந்தாலும் மன்னிப்புக்கோரி ஆட்டத்தை ஆரம்பிக்க இங்கிலாந்துக் குழுவினால் காட்டிங் வற்

□ வி. வாகீஸ்வரன் □

புறுத்தப்பட்டார். தொடர்ந்து மேற்கிந்தியத் தீவுகள் அணியினை ஒரு நாள் போட்டிகளில் தோற்கடித்த பின், முதலாவது டெஸ்ட் போட்டியையும் வெற்றிதோல்வியின்றி முடிவித்தார். ஆனால் 4ஆவது நாள் ஆட்ட முடிவின் பின், இரவு தனது ஹொட்டேலுக்கு ஒரு விபச்சாரியை அழைத்தார் என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டதன் நிமித்தம், தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். தொடர்ந்து 4 போட்டிகளிலும் இங்கிலாந்து படுதோல்வி கண்டது. பின், பாகிஸ்தான் சம்பவம் காரணமாகத் தனது சுயசரிதையில் எழுதிய விளக்கம் காரணமாகவும், 5000பவுண்கள் அபராதம் கட்டினார். தொடர்ச்சியாகத் தனக்கு ஏற்பட்ட பல இன்னல்களிலிருந்து விடுபட, சில காலம் அவர் ஆட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. பின்பும் தெரிவுக்குழுவின் அசிரத்தை காரணமாக விரக்தியுற்றே தென்னாபிரிக்கா செல்கிறார் எனக் கருதப்படுகிறது. தடையுத்தரவு நீங்குகையில் ஓய்வு பெறும் வயதான 39ஐ எட்டி விடும் காட்டிங் கருத்து வெளியிடுகையில், 'தான் பணத்திற்காகவன்றி ஒரு விளையாட்டு வீரனாகவே தென்னாபிரிக்கா செல்வதாக'க் குறிப்பிட்டார்.

அணியின் ஏனைய வீரர்களில் ஜோன் எம்புயறி (முன்னாள் தலைவர்), கிறிஸ் புறோட், ரிம் ரொபின்சன், கிம் பாணற், பிலிப் டிவிரிட்டாஸ், நீல் போஸ்டர். போல் ஜாவிஸ், கிரகாம் டில்லி போன்றோர் அண்மையில் ஆஸி அணியுடன் ஆடிய பிரபல வீரர்கள். இவர்களுடன் முன்னாள் தலைவர் கிறிஸ் கவுட்றி, பில் அத்தி, மத்தியூ மேனார்ட், றேலண்ட் புட்ச்சர், புரூஸ் பிரஞ்ச், றிச்சார்ட் எலிஸன், டேவிட் கிராவ்னி ஆகியோரும் அடங்குவர். 1988ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கட் வீரர் பரிசு பெற்ற மத்தியூ மேனார்டுக்கு 1,20,000 பவுண்கள் வழங்கப்படும் என, அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் 22 வயது மேனார்டைப் போக வேண்டாம் எனவும், எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் என்பது வீணாகப் போகக்கூடாது எனவும், பிரிட்டிஷ் விளையாட்டுத்துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். தெரிவுக்குழுவினரின் அசிரத்தை, விரக்தி, பணம் சம்பாதிக்கும் அவா என்பனவற்றால் உந்தப்பட்டு வரும் இங்கிலாந்து அணியினரைத் தடுக்க தென்னாபிரிக்க கறுப்பர் இனச்சங்கங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அறிவித்துள்ளன. முதிர்ந்தவர்களுடன் இளையவரும் கலந்து கொள்ளும் குழுவைத் தடுத்து நிறுத்தினால்தான், இங்கிலாந்தின் எதிர்காலம் தளிர்க்கும் எனலாம்.

பிரிட்டிஷ் அரசாங்கம் இத்தீவிர சிக்கெடுப்பில் எடுக்கும் நடவடிக்கையிலேயே, உலக விளையாட்டுப் போட்டிகளின் எதிர்காலமே தங்கியுள்ளது. □

# தென் துருவத்தின் அழகுமிகு "விஞ்ஞானக் கண்டம்" அன்டார்க்டிகா,

## வல்லமை நாடுகளின் வேட்டைநிலம் ஆகுமா ?

சென்னையில் 27-2-1988 அன்று நடந்த இந்தியப் புவியியல் ஆசிரியர் கூட்டமைப்பின் 21ஆவது வருடாந்த மகாநாட்டில் சமர்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையின் தமிழாக்கத்தின் பகுதிகள். கட்டுரை ஆசிரியரினால் இங்கு தரப்படுகின்றது.

### முகவுரை

தென் துருவத்தில் 14 மில்லியன் சதுரகிலோ மீற்றர் பரப்பில் உலகின் ஐந்தாவது பெரிய கண்டமாக அன்டார்க்டிகா அமைந்துள்ளது. இக்கண்டத்தின் 98 சதவீதமான பகுதி 1800 மீற்றர் தடிப்பான பனிக்கட்டித் தகட்டினல் மூடப்பட்டுள்ளது. அவற்றுக்கிடையே மிக உயர்ந்த மலைத் தொடர்கள் சில காணப்படுகின்றன. சில இடங்களில் மேற்கொள்ளப்பட்ட துளையிடல் ஆய்வுகள் மூலம் பனிக்கட்டித்தகட்டின் தடிப்பு 4 5 கிலோ மீற்றருக்கு மேல் உள்ளதெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பனிக்கட்டித் தகட்டின் மிக உயர்ந்த உச்சி கடல்மட்டத்திலிருந்து 4000 மீற்றர் உயரத்தில் காணப்படுகின்றது.

அன்டார்க்டிகா தென் கோளத்தின் காலநிலையில் குறிப்பிடத்தக்க செல்வாக்கினைக் கொண்டுள்ளது. இக்கண்டத்தைச் சுற்றித் தாழ் அமுக்க வலயம் காணப்படுவதினல் அப்பகுதிக்குரிய கடல்கள் பெரும் சீற்றம் கொண்டதாக விளங்குகின்றன உலகின் ஏனைய கண்டங்களிலும்பார்க்க காற்றுக்களின் நிகழ்வுகளும் வேகமும் இங்கு அதிகம். உறைபனிப்புயல்கள் மணிக்கு 160 கிலோ மீற்றர் வேகத்தில் வீசுகின்றன. இக்கண்டத்தின் காலநிலையானது மாரியில் மிகக் குளிராகவும் கோடையில் குளிர் சிறிதளவு குறைந்தும் காணப்படும.

### நிலப்பிரிவுகள்

அன்டார்க்டிகாவின் நிலப்பிரிவுகள் கிறீன்விச் நெடுங்கோடுகளை அடிப்படையாகக் கொண்டு பகுதி பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வெடல் கடல் (Weddell Sea) கிழக்கில் கோட்ஸ் நிலமும்(Coats Land) தெற்கில் எடித ரோனி நிலமும் (Edith Ronne Land) வடக்கே பில்ஸ்னர் ரோனி பனிமேடையும் (Filchner Ronne Ice) மேற்குப் பகுதியில் எல்ஸ்வேர்த் உயர்நிலமும் (Ellsworth High Land ) அமைந்துள்ளன. இப் பகுதியில் பனிக்கட்டி ஆறுகளுக்கிடையே பல மலை உச்சிகள் வெளித்தோன்றுகின்றன. அவற்றுள் வில்சன் பெருந்திரள் மலைப்பகுதி 5140 மீற்றர் உயரமானது. இக் கண்டத்தின் தென்முனையில் இருந்து அன்டார்க்டிக் வட்டம் 1000 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. இதற்கு வடக்காக அமைந்துள்ள நிலப்பகுதி அன்டார்க்டிகா குடாநாடு எனவும் அழைக்கப்படும். இதனை கிரகாம நிலம் ( Graham Land) எனவும் அழைப்பர்.

### புவிச்சரிதவியல்

புவிச்சரிதவியல் ரீதியாக அன்டார்க்டிகா மேற்கு, கிழக்கு பகுதி என குறுக்கு மலைத் தொடரினல் (Transantarctica mountains) பிரிககப்படுகின்றது. மேற்குப்பகுதியில் உயர்ந்த மடிப்பு மலைகளும் பனிக்கட்டிக் காலத்துக்குரிய வடி நிலங்களும் அமைந்துள்ளன. கிழக்கு அன்டார்க்டிகா பகுதி பெரும்பாலும் சமமானதும் மடிப்புகளற்ற மேட்டு நிலங்களையும் கொண்டுள்ளன. அன்டார்க்டிகா கண்டம் கொண்டுவானலாந்து என்று அழைக்கப்பட்ட பாரிய நிலத்திணிவில் ஏனைய தென் பகுதி நிலங்களுடன் ஒரு காலத்தில் இணைந்திருந்தது, அகவிசைகளின் தாக்கத்தினல் அது திகைப்புற்று நகர்ந்து இன்றைய கண்டங்களின் நிலையை அடைந்தது. கடந்த காலத்தில் கொண்டுவானலாந்தின் இருப்பினை தென் அமெரிக்கா, ஆபிரிக்க கரையோர பொருத்தங்கள், வடிநிலங்களின் அடையல் திரட்சிகள், நிலக்கரிக் காலத்தின் படிவுகள் என்பன ஆதாரங்களுடன் விளக்குவனவாக உள்ளன.

1969 இல் விஞ்ஞான ஆராய்ச்சிக் குழு ஒன்று உயிர்ச் சுவட்டு (Fossil) ஆதாரங்களை வைத்து இக் கண்ட நகர்வுக் கோட்பாட்டினை உறதி செய்வதற்கு முயற்சித்தபோது தென்முனைக்கு அப்பால் 400 மைல் தூரத்தில் குயின் அலெக்சாந்திரியா தொடரின் (Queen Alexandria Range ) மணற் படுக்கையில் உயிர்ச் சுவட்டினைக் கண்டுபிடித்தது. அன்டார்க்டிகாவின் கிழக்கில் பெருமளவிலான குன்றுகளும் வடிநிலஙகளும் பனிப் போர்வையின் கீழ் புதைந்து உள்ளன. கேபபிறியாவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தோற்றம் பெற்ற தீப்பாறைகள், அடையற் பாறைகள், உருமாறிய பாறைகள் என்பன இங்கு காணப்படுகின்றன.

### உயிரினச் சூழல்

இக் கண்டத்தின் நிலப்பகுதிகள் பெரும்பாலும் அடர்த்தியான தாவரப் போர்வையற்ற வெற்று நிலங்களாக உள்ளன. சில இடங்களில் காளான்களும் (Lichens), பாசியினங்களும் (Mosses) தொடர்ச்சியற்ற முறையில் காணப்படுகின்றன. அன்டார்க்டிகாவின் நிலப்பிரதேச உயிரினச் சூழலிலும் பார்க்க சமுத்திரப் பகுதிகளின் உயிரினச் சூழல் மிகவும் செழிப்பானவை. மிகக் கடுமையான காலநிலைச் சூழலுக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்கின்ற, ஒரு சில தாவர வகைகளும் சொற்ப பிராணிகளும் பெரும்பாலான காலங்களில் கடல்களிலேயே வாழ்கின்றன. புவியின் ஏனைய பகுதிகளில் கண்டறியப்படாத, புதுமையான உயிரின வகைகளை அன்டார்க்டிகா வாழ்விக்கின்றது. இப் பிரதேசத்துக்குரிய உணவுச் சங்கிலியின் பிரதான சேதனப் பொருளாகக் "கிறில்" (Krill) விளங்குகின்றது. இக்கண்டத்தின் தாவர இனங்களில் சாதாழை(Algae), மிதக்கும் உயிர்த்துணுக்குகள் (Plankton) என்பன முக்கியமானவை. வை சீல், திமிங்கலம், மீனினங்கள், பறவைகள் போன்றவற்றிற்கு ஆகாரமாகின்றன. இங்கு காணப்படும் "டயாற்றம்" (Diatoms) கண்களுக்குப் புலப்படுவதில்லை. அவற்றை நுணுக்குக் காட்டியின் உதவியுடனேயே அவதானிக்க முடியும். கரையோரப் பகுதிகளில் காணப்படும் சாதாழை பல்வேறு வகையான கடல் பிராணிகளுக்கு உணவாகவும், உறைவிடமாகவும் பயன்படுகின்றது.

பெங்குயின்ஸ் (Penguins) இக்கண்டத்தில் பெருமளவில் காணபபடுவதுடன் அவையே முதல் பறவையினமாகவும் உள்ளது. தென்கோளத்துக்குரிய முக்கிய பண்புகளை இப் பறவையினங்கள் பிரதிபலிப்பதாக இருப்பதுடன் அந்நிலத்தினதும், பனிப்படலங்களினதும் எஜமானர்களாகவும் விளங்குகின்றன. அன்டார்க்டிகா கண்டத்தின் கரைகளும் தென்சமுத்திர தீவுகளுமே இவற்றின் வாழ்விடங்களாகும். இவற்றினைவிட பல வகையான கரையோர திமிங்கலங்கள், பிராணிகள், சீல் மீன்கள், எலிபன்டசீல், ரொஸ் சிறுத்தைகள் என்பனவும் காணடபடுகின்றன.

**எஸ்.அன்ரனி நோபேட்**

### வளங்கள் (Resources)

விஞ்ஞான ரீதியான ஆய்வுப் பயணங்களின் போது பொருளாதார ரீதியாக உள்ளார்ந்த வளத்தன்மையைக் கொண்ட கனிப்பொருள், மற்றும் வாழ்வுக்குரிய ஏனைய வளங்கள் பெருமளவில் அன்டார்க்டிகாவில் காணப்படுகின்றன என்னும் விடயம் வெளிக்கொணரப்பட்டது. தங்கம், பிளாட்டினம், வெள்ளி, ஈயம், இரும்பு என்பன பெருமளவு காணப்படுவதாக அறியப்படுகின்றது. பிரின்ஸ் சாள்ஸ் மலைத் தொடரில் இரும்புப் படிவுகளும், அன்டார்க்டிக் குறுக்கு மலைத் தொடரில் நிலக்கரியும் 1—6 சென்ரி மீற்றர் தடிப்பில் படிந்துள்ளன. ஆனால் அவை வில்லை வடிவிலும் தொடர்ச்சியற்ற முறையிலும் அமைந்துள்ளமை அகழ்ந்தெடுப்பதில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது உலகிலேயே மிகப்பெரிய நிலக்கரி வயல்களை இக்கண்டம் கொண்டுள்ளதெனக் கூறப்பட்டாலும் அதற்கான ஆதாரங்கள் இன்னும் தெளிவாக்கப்படவில்லை.

வெடல், ரொஸ் கடல்களில் செய்யப்பட்ட ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட ரேசறிக்கால அடையல் படிவுகள் நில நெய் படிவுகளுடன் தொடர்புடையதாக இருக்கலாமெனக் கருதப்பட்டது. ஆனல் இங்கு காணப்படும் உள்ளார்ந்த படிவுகளின் பொருளாதார தகுதியினை நிர்ணயிப்பதில் ஏற்படும் பிரச்சினைகள், தூரத்து அமைவுகளிலுள்ள கனிப்பொருள் வளங்களை அகழ்வதில் ஏற்படும் சிக்கல்கள், கடினமான கால நிலை நிலைமைகள் ஆகியன உற்பத்திச் செலவினை அதிகரிப்பதனல் சிக்கல்கள் ஏற்படுகின்றன. புரதத்துக்கு மூலாதாரமான கிறில் இங்கு பெருமளவு உள்ளது; யப்பான், சோவியத் ருஷ்யாவினல் நீண்டகாலமாக பிடிக்கப்பட்டு பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

### அன்டார்க்டிகா உடன்படிக்கை

1950 ஆம் ஆண்டின் பின் அநேக நாடுகள் அன்டார்க்டிகாவின் நலனில் வர்த்தக, விஞ்ஞான, அரசியல் ரீதியான காரணங்களுக்காக ஆர்வம் காட்டின அநேகமான நாடுகள் தமது கட்டுப்பாட்டு நிலையங்களை அங்கு அமைத்தது டன், அங்குள்ள கனிப்பொருள் வளங்களைச் சுரண்டுவதற்கான மறைமுக நோக்கத்துடன், அப்பிரதேசத்துக்கான (Territory) ஆதிபத்திய உரிமையையும் கோரின. தென்அமெரிக்காவிலும், தென் ஆபிரிக்காவிலும் செழிப்பு மிக்க கனிவளங்களைக் கொண்ட மாகாணங்களின் புவிச்சரிதவியல் பகுதிகளுக்கும் அன்டார்க்டிகாவின் அறியப்பட்ட சில பகுதிகளின் புவிச்சரிதவியலுக்குமிடையே, மிக நெருங்கிய ஒத்ததன்மைகாணப்பட்டமை, 1959 ஆம் ஆண்டு " சர்வதேச புவிப்பௌதீகவியல் வருட" பிரகடனத்தின் பின்பே (IGY — International Geographical Year) திடமாக உறுதிப்படுத்தப்பட்டது. இத்தகைய நிகழ்வுகளினல் பல நாடுகள் ஆர்வமூட்டப்பட்டதுடன் அன்டார்க்டிகாவில் எவ்வளவு பகுதிகளை இயலுமான வரையில் ஆக்கிரமித்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாக ஆக்கிரமிக்கத் தூண்டின.

பிரதேச உரிமை கோருவதன் காரணமாக நாடுகளிடையே எழும் முரண்பாடுகளைத் தடுப்பதற்கும், முற்று முழுதான விஞ்ஞான ஆய்வு வேலைகளுக்கு இக்கண்டத்தைப் பயன்படுத்துவதற்கான அழுத்தத்தைக் கொடுப்பதற்கும், சர்வதேச புவிப்பௌதீக வருடம் 1957—58 இல் தனது கவனத்தை அன்டார்க்டிகா பற்றியதாகவே கொண்டிருந்தது. இதன்பின் சர்வதேச நாடுகளின் உதவியுடன் விரிவான ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. முனைவுப் பகுதிக்கான செயற்கைக் கோள் உட்பட பல நவீன சாதனங்கள் பயன்பாட்டுக்கு வந்தன. அன்டார்க்டிகா ஆய்வுக்கான விசேட குழு ஒன்று (SCAR — Special Committee on Antarctica Research) அவதானிப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. தேசிய ரீதியான விஞ்ஞான செயற்றிட்டங்களையும் தர்க்கரீதியாக ஏற்படக் கூடிய பிரச்சினைகளைத் தீர்க்கவும் முடிவுகள் பற்றி அறிவிப்பதற்கும், பரஸ்பர ஆள் பரிமாற்றம் செய்வதற்கும் இக் குழு பெரும் உதவியாக இருந்தது.

நாடுகளிடையே ஏற்பட்ட நெருங்கிய ஒத்துழைப்புக் காரணமாக 1959 இல் மார்கழி மாதம் அன்டார்க்டிகா உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. இந்த உடன்படிக்கை மூலம் 1959 இல் இருந்து அடுத்த 30 வருடத்துக்கு நாடுகள் பிரதேச உரிமை கோருவதைத் தற்காலிகமாக நிறுத்தியதுடன், அன்டார்க்டிகாவில் எல்லா இராணுவ தளங்களையும் கலைப்பதற்கும், அணுபரிசோதனைகளைத் தடைசெய்யவும், கதிர் வீசல் பொருட்களின் கழிவுகளைப் புதைப்பதை தடைசெய்யவும் அறைகூவல் விடுத்தது. விஞ்ஞான ரீதியான முயற்சிகளின் மூலம் சர்வதேச ஒத்துழைப்பை விருத்தி செய்வதற்கான முயற்சிகளை இக் குழு மேற்கொண்டது.

அன்டார்க்டிகா உடன்படிக்கையின் பின் ஆய்வுகளுக்கான கருவியின் பயன்பாடு அதிகரித்தது. மாதிரி வகை ஆய்வுகள் விருத்தி செய்யப்பட்டன. தரவுகளை ஆய்வு செய்ய கணணிகள் பயன்படுத்தப்பட்டன. 12 நாடுகளின் ஐம்பதுக்கு மேற்பட்ட மாரிகால நிலையங்கள் (Wintering Stations) அன்டார்க்டிகாவிலும் உப அன்டார்க்டிக் பகுதியிலும் ஸ்தாபிக்கப்பட்டன. விமான சேவைகள் முதன் முறையாக ஒழுங்கு முறையில் ஆரம்பிக்கப்பட்டன. சோதி (Aurora), அண்டக் கதிர்கள் (Cosmic rays), புவிக்காந்தவியல், பனிக்கட்டி ஆற்றுத்தாக்கம், புவியீர்ப்பு அளவீடு, வானிலையியல். சமுத்திரவியல், புவிநடுக்கவியல் தொடர்பான அநேக பிரதான விஞ்ஞான செயற்றிட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

(அடுத்த இதழில் முடிவுறும்)

## கலைச்சாரல்

# வைரமுத்துவின் அரங்கம்
## ஒரு அறிமுகம்



நடிகமணி வி. வி. வைரமுத்து

11-02-1924 08-07-1989

□□ குழந்தை ம. சண்முகலிங்கம் □□

சென்றவாரத் தொடர்ச்சி

அவரது மேடையசைவுகள், சைகைகள், நிலைகள் என்பன யாவும் பாத்திரம், மனநிலை, மனப்போக்கு, எதிர்விளைவு என்பவற்றைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி நிற்பதோடு, மேடையில் சிருஷ்டிக்கப்படும் பாத்திரம் என்ற தனிமனிதனின் அகத்தை, சிந்தனையை வெளிப்படுத்தி அவற்றின் மூலம் அம்மனிதனின் இருப்பை உறுதிப்படுத்துவனவாக இருந்தன. இவ்வாற்றல் வைரமுத்துவிடம் இருந்தமையாலேயே அவரால் அரிச்சந்திரன் முதல் அந்திராசி வரையிலான பல்வேறுபட்ட குணநலமுடைய பாத்திரங்களைச் சிருஷ்டிக்க முடிந்தது.

ஐரோப்பிய ''ஒப்பேரா''வின் வளர்ச்சிப் போக்கில் மூல எழுத்தை (Text) விட இசை மேலோங்கி நிற்கும் பண்பு எழுந்தது மூல எழுத்து முக்கியத்துவம் குறைந்து, அவை வெறுமனே இசைச் சொற்களாக மட்டுமே கருதப்பட்டன. அவற்றில் இசைப் பண்பு முதன்மை பெறப் பாத்திரப்பண்பு வலிமை குன்றி, ஒரு பரிமாணமுடையதாக மட்டுமே இருந்தது. ஐரோப்பிய இசை நாடகங்களிலும் (Musical Plays) இந்த நிலைமையே நிலவியது. எமது இசை நாடக மரபிலும் இப்பண்பு நிலவிவந்தது. ஆனல் வைரமுத்து தனது நடிப்புத் திறத்தாலும், இசை வல்லமையாலும், நடிப்பையும் இசையையும் வளர்த்தெடுத்துத் தான் சிருஷ்டித்த பாத்திரங்களை முப்பரிமாணமுடையவையாகப் படைத்தார்.

இசையை மட்டும் நயப்பதற்கு எவரும் வைரமுத்துவின் அரங்குக்குச் சென்றதில்லை. இசையைக் கேளாது விடுவதற்கும் யாரும் செல்லவில்லை. அங்கு நிகழ்ந்த அனைத்தையும் பார்க்கவென்றே அனைவரும் சென்றனர். அந்த நாடகச் சூழலில் வைரமுத்துவைக் காணச் சென்றனர் இந்த நிலைமை எதனுல் ஏற்பட்டது? நாடகம் என்ற ஊடகத்தின் முழுப்பரிமாணத்தையும் வைரமுத்து அறிந்து, உணர்ந்திருந்ததனுலேயே அது ஏற்பட்டது. நாடக அரங்கம் என்பது, கட்புல அரங்கும், செவிப்புல அரங்கும், அசைவரங்கும் இசைவதன் மூலம் பிறக்கின்ற கலையைப் படைக்கும் இடம் என்பதை அவர் நன்கறிந்து அவை அனைத்தையும் சிறந்த அளவுப் பிரமாணத்தோடு பயன்படுத்தினுர். பாகசாஸ்திர நூலில் உண்பவர் பற்றி ஒரு அத்தியாயம் எழுதப்படுவதில்லை. ஆயினும் உண்ணுதலே அதன் இலக்கு. அவ்வாறே, அரங்கத் தயாரிப்புப் பற்றிய நூலில் பார்வையாளர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பது பற்றிக் கூறப்படுவதில்லை. இருப்பினும் பார்வையாளருக்காகவே அவை தயாரிக்கப்படுகின்றன. அரங்கவியலை அனுபவத்தினூடு அறிந்து கொண்டு, அதன் வளர்ச்சியோடு தானும் இணைந்து வளர்ந்து வந்த வைரமுத்து, தனது படைப்பைக் கடும் பசியோடு வருபவனுக்குப் படைக்கும் வெறும் உணவாக மட்டும் கொள்ளாது, இருந்து சுவைக்க வரும் சுவைஞருக்கு வழங்கும் பெருவிருந்தாகப் படைத்தார்.

தனியொரு நடிகர் என்ற நிலையில் வைத்து வைரமுத்துவை நோக்குகையில், பேர்டோல் பிறெஃட் தனது நடிகரைப் பார்த்துக் கூறியது பொருந்துகிறது: '' இது உனது கணம்; அதை நழுவவிடாதே. இப்பொழுது உன்னுடைய நேரம் வந்து விட்டது ...... தயாரிப்பில் பங்கு கொள்ளும் அனைவரும் பொது நோக்கினை முன்னெடுத்துச்செல்வதிலேயே அக்கறை கொண்டுள்ளனர். உன்பணியும் அதுவே. ஆயினும் உனது அக்கறை என்றும் ஒன்றுண்டு. அது பொது அக்கறையோடு ஒருவகையில் முரண்பட்டதாக இருக்கும். இந்த முரண்பாட்டிலிருந்தே அனைத்தும் வாழ்கிறது. '' இவ்வாறு தனிமனித அக்கறை, கூட்டு அக்கறை என்பவற்றினைச் சரியான அளவுப் பிரமாணத்தில் வைரமுத்து அறிந்து பயன்படுத்தினுர். அவ்வாறு செய்தமையால் அவர் மேடையில் தனி நடிகனுகப் பிரகாசித்த அதேவேளையில், அவரது படைப்புக்களும் வெற்றிகண்டு வந்தன.

நடிபாகம், மேடைச் சூழல் என்பவற்றை ''நடிகமணி'' தனது ஆற்றல், கற்றல், பயிற்சி என்பவற்றுல் மிகவும் திறம்படப் பயன்படுத்தி வந்தார் சிறந்த நடிப்புக்கு இலக்கணம் பாத்திரமாக மாறுவதல்ல. பாத்திரம் போலச் செய்தல் என்ற நிலையிலேயே நடிகன் தனது நடிப்பினை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். வைரமுத்து இதில் வெற்றி கண்டார் சுடலைக் காவலனுக நடிக்கும் வேளையில் அவர் தன் கைக்கோலை வெறும் ஊன்று கோலாகப் பயன்படுத்தாது, எரியும் விறகை நெருப்புள் தள்ளப் பயன்படுத்தும் கைக்கருவியாகவும், சிறுவனின் சடலத்தை வெறுப்போடு தள்ளப் பயன்படும் கோலாகவும், தன் மாறுபட்ட மன நிலைகளை வெளிப்படுத்தத் துணை நிற்கும் நடிப்புக்கான துணைக் கருவியாகவும் பயன்படுத்துவார். அக்கோல் அவரது உடலின் ஒரு பகுதி போல நின்று செயல் புரிவதைக் காணலாம். அவர் நடிப்பில் கையாண்ட நுட்பத்தை அக்கோல் வெளிப்படுத்தி நிற்கும்.

நடிப்பு என்பது நடிகரின சொந்தக் குணங்களை மீறி ஒரு நடிபாகத்தின் சாரத்தை உள்ளடக்கி வெளிப்படுத்துவதாகும். எந்தவொரு கலையின் வெளிப்பாட்டுக்கும் கலைஞரின் சொந்த ஆற்றல், கற்றல், பயிற்சி என்பன அவசியம். இவை மூன்றும் வைரமுத்துவிடம் நிரம்பவே இருந்தன. அத்தோடு ஒரு நடிகரின் அடிப்படை வெளிப்பாட்டுச் சாதனங்களான உடல், குரல்,

வைரமுத்து கைக்கொண்ட அல்லது விருத்தியாக்கிக் கொண்ட நடிப்பு மோடியினை எந்தவகைக்குள் அடக்கலாம் எனச்சிந்திப்பதும் அவசியமாகின்றது இவர் சார்ந்திருந்த இசைநாடக மரபின் ஆரம்ப கால நடிகர்கள் பலர் இசையினை முதன்மைப் படுத்தினரேயன்றி நடிப்பைப்பற்றி அதிகம் அக்கறை கொள்ளவில்லை. அவர்களது இசைவல்லமைக்காகவே அவர்கள் பெரிதும் போற்றப்பட்டனர். அத்தகையோரது செயற்கையான நடிப்பு முறையிலிருந்துஇவரது நடிப்பு வேறுபட்டிருந்தது. இவர் தான்வாழ்ந்த காலத்து அரங்குகள் பலவற்றின் நடிப்பு முறைமைகளின் தாக்கத்துக்குள்ளாகி இருக்கவேண்டுமென எண்ண இடமுண்டு. இவர் நடிபாகமேற்று நடித்து வந்துள்ள பல பாத்திரங்களை நோக்குமிடத்து இவர் மனேரதியவாதம் ( Romanticism ), இயற்பண்புவாதம், யதார்த்தவாதம், அரங்கியல்வாதம் என்பவற்றின் பண்புகள் இணைந்த குறியீட்டுப் பண்புடன் கூடிய, மோடிப்படுத்தப்பட்ட முறைமை ஒன்றினைத் தனது நடிப்பில் வளர்த்தெடுத்தார் எனக் கொள்ள இடமுண்டு. ( இக்கருத்து சான்றுகளோடுகூடிய விரிவான விளக்கத்தை வேண்டி நிற்கிறது.) சுருங்கக் கூறின், இவர்மோடிப் படுத்தப்பட்ட ஒரு நடிப்பு முறைமையினை இசை நாடகத்துள் தோற்றுவித்தார் என்று கூறமுடியும்.

இசைநாடகவரங்கு பலகாலம் பொருத்தமற்ற வேட உடுப்புக்களையும், பகட்டும் ஆடம்பரமும் நிறைந்த பட்டுப் பீதாம்பரங்களையும் நடிகர்மீது சுமத்தியும், பொருந்தாக் காட்சிப் பின்னணிகளைத் தொங்க விட்டும் தனது நாடகங்களை மேடையேற்றிவந்தது. வைரமுத்து நடிப்போடு மட்டும் நில்லாது, ஏனைய அரங்கக்கலைகளான வேடஉடுப்பு ஒப்பனை, ஒளியமைப்பு, காட்சியமைப்பு, இசைக்கருவிகளின் பயன்பாடு என்பவற்றை, இயற்பண்புவாதமும் குறியீட்டுவாதமும் கலந்த மோடியில், கதைக்கும் கதைநிகழ்களத்துக்கும், அதன் காலத்துக்கும், பாத்திரத்துக்கும், மனநிலைக்கும் ஒத்தவாறு பயன்படுத்தினுர் அவ்வாறு செய்ததன் மூலம் அவற்றில் நாடகப்பண்பு மேலோங்கச் செய்தார்.

நாடகங்களை இரு வகைக்குள் பொதுவாக அடக்குவதுண்டு: ஒன்று, குறித்தவொரு பண்பாட்டுக்குள் நிற்பவை; மற்றையது, அனைத்துப்பண்பாட்டுக்கும் பொதுவானவை. வைரமுத்துவின் அரங்கில் ஆடப்பட்டுவந்த நாடகங்களை மேலெழுந்தவாரியாக நோக்குமிடத்து, அவையாவும் குறித்தவொரு பண்பாட்டுக்குள் அடங்குவனவாகத் தோன்றினும், உண்மையில் அவற்றில் பல, அனைத்துப்பண்பாட்டுக்குள்ளும் நிற்கவல்லனவாக உள்ளன என்பதை நாம் காணலாம். அவற்றில் பெரும்பாலான நாடகங்களின் ஐதீகம், மெய்யியல் என்பன பண்டைய சமூகங்கள் அனைத்திலும் காணப்பட்ட ஐதீகங்களையும் மெய்யியலையும் ஒத்ததாகவே இருந்தன. இந்த வகையால் இவை, உலகின் செந்நெறி / தொல்சீர் பண்பாட்டுள் பொருந்தி நிற்கின்றன. வைரமுத்துவின் நாடகங்களின் ஐதீகம், வழிவழிவந்த சமூகத்தின் ஐதீகமாகவும், மக்களுக்கு நன்கு பரிச்சயமான ஐதீகமாகவும் இருந்தமையால்தான், வைரமுத்துவின் அரங்கு, இசையாலும், நடிப்பாலும், பாத்திரப் படைப்பாலும் ஏனைய அளிக்கைமுறைமைகளாலும் கவித்துவ அழகை வளர்த்துக் கொள்ளவேண்டி இருந்தது. இக்காரணத்தினுலேயே உலகின் சிறந்த அவலச் சுவை நாடகங்கள் உயர்ந்த இலக்கியங்களாகவும், மிகச் சிறந்த அரங்கப் படைப்புக்களாகவும் ஓங்கின.

அரிச்சந்திர புராணத்தை, குறிப்பாக மயானகாண்டத்தை, ஒரு நல்ல அவலச் சுவை நாடகமாக மேடையில் நிறுத்திய பெருமை வைரமுத்துவையே சாரும். புராதன கிரேக்கத்தின் சோபோகிலிசின், அல்லது இங்கிலாந்தின் ஷேக்ஸ்பியரின் சிறந்தவொரு அவலச் சுவை நாடகத்தின் இறுதிக் கணங்களில் பார்வையாளரின் மனங்களில் எழுகின்ற பரிவும், பயமும் வைரமுத்துவின் படைப்பாற்றலால் மயானகாண்டத்தின் இறுதிக்கணங்களில் விளைவதை, நாம் அவதானிக்கலாம். வைரமுத்து அரிச்சந்திரனை ஒரு அவலநாயகனை உயர்த்தி விடுகிறுர். அந்த அவலநாயகனின் இக்கட்டான நிலையினைப் பயன்படுத்திப் பார்வையாளர் உள்ளங்களில் பரிவை வளர்த்து விடுகிறுர். அதனுல், பார்வையாளர். அந்த அவல மனிதனின் வீழ்ச்சியைக் கண்டு சோகமும், அவனது பௌதீக வீழ்ச்சியே அவனது ஆன்மாவின் வளர்ச்சிக்கும், வீரியத்துக்கும், புத்துயிர்ப்புக்கும் காரணமாகவுள்ளதைக் கண்டு, ஆனந்தமும் அடைகின்றனர். அவலப் பண்புடையதோர் கவித்துவ வடிவத்தால் மட்டுமே, இத்தகையதொரு மர்மமான விளைவினைப் பார்வையாளர் மனங்களில் ஏற்படுத்த முடியும் அந்தக் கவித்துவ அழகை வைரமுத்து தனது கலையின் மூலம், மயானங்காக்கும் அந்த மனிதனுள் புகுத்தி விடுகிறுர். தன் தன் தொழிலுக்கேற்ற வகையில் தோற்றத்திலும், செயலிலும் நிற்பவனே அழகானவன் எனப்படுகிறது. எனவே சரியானதுதான் அழகென்றல், வைரமுத்துவின் மயானம் காக்கும் அரிச்சந்திரன் மிகவும் அழகானவனே.

வைரமுத்து தான் வாழ்ந்த காலத்தினைத் தனது மேடையில் பிரதிபலித்தாரா அல்லது பிரதிநிதித்துவப் படுத்தினுரா என்றவொரு வினவினையும் எழுப்பலாம். இதற்கு இரண்டு வகையிலுமே விடையிறுக்கலாம். ''வாழும் காலம்'' என்பது "சமகால நிகழ்வுகளைக்" கொண்டது மட்டும்தான் எனக் கருதுகின்றவருக்கு, ''இல்லை'' என்ற விடை மனத் திருப்தியைத் தரவல்லது, ''மாற்றப்படக் கூடிய ஒன்று

(11ஆம் பக்கம் பார்க்க)

## அன்னு அக்மதோவாவின் மூன்று கவிதைகள்

சூரியனைப்* பற்றிய நினைவு என்இதயத்தில்
சுருங்கி வருகிறது
புல்வெளிகள் மஞ்சள் பாரித்துள்ளன
காற்று கடந்து செல்கையில் பனித்துகள்களைச்
சற்று சலனப்படுத்துகிறது

உறைந்துபோன இக்குறுகிய கால்வாய்களில்
நீரோட்டம் இல்லை
ஓ இங்கு ஏதும்இனி நடக்கப் போவதில்லை
ஒருபோதும் இல்லை
விரிந்த வான்வெளியில் வில்லோ மரம்
தெளிவாக விசிறிபோல் விரிந்துள்ளது
ஒரே படுக்கையில் நாம் இருவரும்
படுக்காமலிருப்பது நல்லது போலும்

சூரியனைப் பற்றிய நினைவு என்இதயத்தில்
சுருங்கி வருகிறது
இனி என்ன இருளா?
இருககலாம். இந்த இரவின் குளிர்
பனிக்காலத்தின் குறியாகத்தான் இருக்கவேண்டும்.

*சூரியன் குமிலியோவைக் குறிக்கிறது.

2

தீனமானது எனது குரல்; நலிவடையவில்லை
எனது சித்தம்:
அன்பு இல்லாமலிருப்பது என் நிம்மதியைக
கூட்டத்தான் செய்கிறது.
நெடிய வானம், மலைக்காற்று வீசுகிறது,
என் எண்ணங்களோ களங்கமற்றவை.

உறக்கமின்மை என்றதாதி எங்கோ போய்விட்டாள்
சாம்பலாய் எரிந்தவற்றை எண்ணி நான்
உருகுவதில்லை.
மணிக்கூண்டிலுள்ள அந்தக் கோணலான கரம்
ஒரு நஞ்சுதோய்நத அம்பாக இனி
தோன்றுவதில்லை.

இதயத்தின்மீதான கடந்தகாலத்தின் பிடிப்புதான்
எவ்வளவு தகர்ந்துவிட்டது!
அண்மித்துவிட்டது சுதந்திரம். அனைத்தையும்
நான் மன்னிப்பேன்,
வசந்தகால மழையில் நனைந்த பாசியின்மீது
ஓடிவிளையாடும் ஒளியை ரசித்தவாறே.

தமிழில்: எஸ். வி. ராஜதுரை
வ. கீதா
நன்றி: அன்னு அக்மதோவா கவிதைகள்

3

**மாலையில்**

தோட்டத்தின் இசையில்
வெளிப்படுத்த முடியாத் துயரம்.
தட்டின்மேல் ஐஸ்கட்டியில்
'மட்டிச்சதை'யின் கூர்மையான கடல்மணம்,
புதுமையுடன் மணக்கிறது.

''நான் உண்மையான நண்பன்'' என
அவன் எனக்குச் சொன்னுன்;
எனது உடைகளையும் தொட்டான்
அவனது கரங்களில்
எந்த, உணர்ச்சியுமில்லை.

அது. பூனையையோ ஒரு பறவையையோ
தொடுவதனைப் போல......
செம்மையாய் அமைந்த குதிரையின்முதுகில்,
சவாரிசெய்வோனைப் பார்ப்பதனைப் போல...
மெல்லிய பொன்நிற இமையின் கீழே,
அவனது
கண்களில்மட்டும ஒளி.

பரவும் புகையின்மேல்
வயலினின் துயர இசை, எழும்புகிறது:
கடவுளுக்கு நன்றிசொல்;
முதற் தடவையாக
உன்,
காதலுடன் நீ, தனியாக.

— 1913

தமிழில்: அ. யேசுராசா
நன்றி ; அலை (மார்கழி - 1988)

# அன்னு அக்மதோவா

இந்த நூற்றாண்டின் மாபெரும் கவிஞர்களில் ஒருவரான அன்னு அக்மதோவாவின் (1889—1966) நூற்றாண்டு நிறைவு 29 6.1989 இல் கொண்டாடப்பட்டது. யுனெஸ்கோ நிறுவனம் இந்த ஆண்டை 'அக்மதோவா ஆண்டு' என அறிவித்துள்ளது.

பள்ளி மாணவியாயிருந்தபோது சந்தித்துக் காதலித்த நிகோலாய் குமிலியோவ் என்ற கவிஞரை 1910 இல் திருமணம் செய்தார். 1916 இல் இருவரும் பிரிந்தனர்.

அக்மதோவாவின் ஆரப்பகாலக் காதற் கவிதைகள், இந்த உறவின் கசப்பும் இனிமையும் நிறைந்த அனுபவங்களையே சித்திரிக்கின்றன. ஸ்டாலினின் கலாசாரக் காமிஸாரான ஸ்தனேவ் ''பாதி கன்னிகாஸ்திரீ பாதி வேசி'' என அகமதோவாவை இழித்துரைத்தான்.

புகழ்பெற்ற இரங்கற்பா (Requiem) தொடர் கவிதையின் சில பகுதிகளும், அதைப்பற்றிய கட்டுரையும் அடுத்த இதழில் வெளியாகும்.



சென்ற ஆண்டில் செய்திப்பத்திரிகைப் பேட்டியொன்றில் பெல்லா அக்மதுலினு (சோவியத் யூனியனில் இன்று எழுதும் பிரபல்யமான பெண் கவிஞர்) கூறினர்: ''எனக்குத் தெரிந்தவரை, 20 ஆம் நூற்றண்டின் மிகச்சிறந்த எமது கவிஞர்களிருவரும் பெண்கள் — அன்னு அக்மதோவாவும் மரினு ஸ்வெத்தயேவாவும்.'' நீண்டகாலமாக எனது அபிப்பிராயமும் அவ்வாகவே இருந்ததில் நான் மிகமகிழ்ச்சியடைந்தேன். இரண்டு கவிஞர்களின் சில கவிதைகளை நான் மொழி

**றெஜி சிறிவர்தன** ☐

பெயர்த்திருந்த போதிலும், மிகவும் நெருக்கமுற வெளிப்படுத்திய கவிஞர் அக்மதோவா தான்.

அவருடைய கவிதைகள் இலகுவாக மொழிபெயர்க்கப் படக்கூடியனவல்ல. மேலோட்டமாகப் பார்க்கையில் அவருடைய கவிதைகள் எளிமையானவை; நவீன கவிதைகளில் அடிக்கடி எதிர்கொள்ள நேர்கிற சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட சிக்கலான சொற்றொடர்கள் இல்லாமலும், எந்தவித இருண்மை இல்லாமலும், பளிங்குபோல் மிகத் தெளிவாக அவை இருக்கின்றன. ஆனுல் அந்த எளிமை ஏமாற்றிவிடும் தன்மையது. பார்வைக்கு அமைதியானதாகத் தோன்றும் அவரது கவிதைகள், தம்முள்ளே ஆழமான உணர்ச்சிகளைக் கொண்டுள்ளன. அவரது கவிதைகள் செட்டானதும் ஒருமுகப்படுத்தப் பட்டவையுமாகும்; உணர்ச்சிகள் சரியாகக் கட்டுபபடுததப்பட்டு தடைப்படுத்தப்பட்டனவுமாகும். தனது சொந்தத் துயரங்களைப் பற்றி அவர் எழுதுகையில்கூட சுழிவிரக்கமோ, எந்தவித மிகைப்படுததல்களோ அவற்றிலிருப்பதில்லை. அவரது படைப்புககளிற் காணப்படும் வடிவத்தின் உயர் முழுமை என்பது, அவரது ஆன்மீக ஒழுக்கத்தின் ஒரு பகுதியேயாகும். பூங்காவில் வீழ்ந்து கிடக்கும் சிலையொன்றை நோக்கிச் சொல்லுவதான, அவரது ஆரம்ப காலக் கவிதையொன்றில் அவர் சொல்கிருர்:

''குளிர்ந்த ஒன்றே, வெண்ணிறமான ஒன்றே, காத்திரு;
நானுங்கூட பளிங்காய் மாறுவேன்'',

அந்த ஆசை நிறைவேறியது.

அக்மதோவா தனிப்பட்ட உறவுகளையும், குறிப்பாகக் காதலையும் பற்றி எழுதும் கவிஞரானுர். இத்தோடு புரட்சிக்கு முந்திய தாராளவாத புத்திஜீவிகள் அணியை அவர் சேர்ந்திருந்த உண்மையும் இணைந்தே, புரட்சிக்குப் பிந்திய நாட்களில் அவரது கவிதைகள் மதிப்புக் குறைவாகப் பேசப்படக் காரணமாயின. அந்தக் காலத்தின் உத்தியோகபூர்வ பொல்ஷெவிக் விமர்சகர்களான ட்ரொட்ஸ்கியும் லூனசார்ஸ்கியும், சமூக முக்கியததுவம் அற்றிருப்பவையெனக்கூறி, அக்மதோவாவின் கவிதைகளைப் புறக்கணித்தனர். ஸ்டாலினின் 'சுத்திகரிப்பு'க் காலகட்டத்தில் வரிசையாக அக்மதோவா எழுதிய 'இரங்கற்பா' என்ற தலைப்பிலான மிகச் சிறந்த கவிதைகளை வாசிப்பதற்கு ட்ரொட்ஸ்கி உயிரோடு இருந்திருந்தால், அவரைப்பற்றிய தனது கணிப்பீடு பிழையென்பதை ஒபபுக்கொண்டிருப்பார்.

இலக்கிய வரலாற்றில் தனித்தன்மை வாய்ந்ததான சூழ்நிலைகளில் 'இரங்கற்பா' படைக்கபபட்டது. அவ்வேளை அக்மதோவாவின் மகன சிறையில் இருநதான். (எதிர்ப்புரட்சிச் சதியில் சம்பந்தபபட்டிருந்ததான குற்றச்சாட்டின் மீது 1921 இல் சுட்டுக்கொல்லப் பட்டவரின் மகனுக இருந்ததே, அவனது ஒரே குற்றமாகும்.); அவர் சேர்ந்து வாழ்ந்துகொண்டிருந்த காதலனும் கைது செய்யப்பட்டான்; தானும் பெரும் அபாயத்திற்குள் இருபபதையும் அவர் உணர்ந்திருந்தார். ஐந்தாண்டுகளாக அத்தொடர்கவிதைகளை உருவாககிக் கொண்டிருக்கையில், அதை எழுதி வைக்க ஒருபோதுமே அவர் துணியவில்லை. ஏனென்ருல் அவரது இருப்பிடம் சோதனையிடப்பட்டு அக்கையெழுத்துப் பிரதிகள் கண்டுபிடிககப்பட்டால், அவர் தண்டிக்கப்பட்டிருப்பார் கவிதைகளை மனதில் உருவாக்கி, ஞாபகத்தில் பதித்துவைக்கவும், ஞாபகத்தில் வைததருக்கும்படி நணபர்களுக்குச் சொல்லிவைக்கவும் தான் — தான் இறக்கநேரிட்டாலும் தனது கவிதைகள் உயிர்பிழைத்திருக்கும் என்பதால் — அவரால் முடிந்தது.

அவரது நெருங்கிய தோழியான லிடியா சுக்கோவ்ஸ்காயா கவிஞரைபபற்றிய தனது நினைவுக் குறிப்பில் வருமாறு குறிப்பிடுகிறுர்:

தமிழி :
☐ **அ. யேசுராசா** ☐

''அன்னு அந்திரீவ்னு எனது இருப்பிடத்திற்கு வருகை தரும்போது இரங்கற்பா கவிதை வரிகளை முணுமுணுக்கும் குரலில் என்னிடம் சொல்வாள். ஆனல் 'ஃபொன்ரனி டொம்' இலுள்ள தனது அறையில் முணுமுணுக்கக்கூட அவளுக்குத் துணிவில்லை உரையாடலின்போது டீரென அவள் மௌனமாகிவிடுவாள். கண்களினல் சைகைசெய்து கூரையையும் சுவர்களையும் எனக்குக் காட்டிவிட்டு துண்டுக் கடதாசியையும் பென்சிலையும் எடுத்துக்கொண்டு, சாதாரணமாய்க் கதைக்கிறதுபோல் ''தேநீர்குடிக்கிருயா?'' என்ருே ''வெயிலில் நல்லாய்க் கறுத்துப் போயிருக்கிருய்'' என்ருே

(11ஆம் பக்கம் பார்க் )

தேசிய இனப் பிரச்சினைக் கதை—10

திசையின் சிறுகதை

# கோசலை

ரஞ்சகுமார்

"குலம்! ...... மாடுகளுக்குக் கொஞ்சம் வைக்கல் இழுத்துப்போடு மேனே"

குலம் மல்லாந்து படுத்துக் கிடந்தான். ஓலைப்பாயில் தலையணைகூட இன்றிக்கான் இவன்

---

அலை சஞ்சிகையே ரஞ்சகுமாரை இலக்கிய உலகிற்குத் தெரியப்படுத்தியது.

கோசலை கதையும் 'அலை'யிலேயே வெளிவந்தது.

திசையில் ஆட்கொல்லி குறுநாவல் தொடராக வெளிவந்திருக்கிறது.

அண்மையில் மோகவாசல் என்ற சிறுகதைக் தொகுப்பினை வெளியிட்டிருக்கிறார்.

---

படு பான் முதுகு வலிக்குமா, இல்லையா? இவன் ஏன் ஒரு காட்டுப் பிறவி மாதிரி இருக்கிறான்!

அம்மா திண்ணைக் குந்தில் கால் நீட்டி உடகார்ந்தவாறே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"கொஞ்சம் வைக்கல் இழுத்துப் போடன் அப்பன்... மாடுகள் கத்துதெல்லே!......"

குலம் நெற்றியில் முழங்கைகளை அழுந்தப் போட்டவாறு, கால்களை ஆட்டியவாறு படுத்துக் கிடந்தான். அம்மா இவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். மார்பில் உரோமங்கள் படர்கிற வயது. முரட்டுத்தனமான உடல்வாகு. குரல்கூடக் கட்டைக்குரல், இவனுடைய அப்பா மாதிரி. நெற்றியில் தூக்கிப் போட்டிருந்த கைகளைப் பார்த்தாள். நரம்புகள் புடைத்துக்கொண்டு விபமித் தெரிந்தன. உள்ளங்கைகள் முதலையின் முதுகு மாதிரி காய்த்துப் போயிருந்தன. விரல்கள் ஒயிலும் கிறீஸும் படிந்து பழுப்பு நிறமாகத் தெரிந்தன. நகக் கண்களில் கறுப்பாக ஓயில் அழுக்குப் படிந்திருந்தது.

"குலம்! ...... கொஞ்சம் வைக்கல ......" அவசரமாகப் பாய்ந்து இடைவெடடியவாறு மகன சிடுசிடுததான்.

"நீயே இழுத்துப் போடன் ......எனக்கு ஒரே அலுப்பு."

அம்மா சற்றே வேதனையின் சாயல் படியச் சிரிததாள்.

சீலன் இருந்தால் இப்பிடியா எலலாம இருக்கும்? அமமா சொல்லாமலே வேலை எல்லாம் செய்து கொடுப்பான. மாடுகளுககு வேளாவேளைக்கு வைக்கோல் இழுத்துப் போடுவான். தண்ணீர் கொண்டுபோய் வைபபான். கோழிகளைக் கவனித்துக் கூடுகளில அடைப்பான. சமயத்துக்கு தேங்காய் கூட அம்மாவுக்கு துருவிக் கொடுப்பான்.

எவ்வளவு அருமையான மகன்!

அவன் ஏன் அப்படிப் போனான்?

ஊரை நீங்கித் தூரே வயல் வெளிகள் பரந்திருக்கின்றன. இடையிடையே பனங்கூடல்களும் திடல்களும் தனித்துக் கிடக்கின்றன. மாலைநேரங்களில் அம்மா அவ்விடங்களில் புல் செதுக்கிக் கொண்டுவரப் போவாள். சைக்கிள் ஓட்ட முடியாது அவ்விடங்களில். சீலன் சைக்கிளில் சாய்ந்தபடியே ரோட்டில் காத்து நிற்பான். அம்மா புல்லுக் கட்டுடன் திரும்பிவரும் நேரங்களை அவன் நன்கு அறிவான். அம்மாவின் உருவம்மிகத்தூரே மங்கலாகத் தெரியும் போதே ரோட்டை விட்டிறங்கி அம்மாவை நோக்கி விரைந்து போவான். பாரத்தை மாற்றிக்கொண்டு அம்மாவுக்கு முன்னே வீட்டுக்கு சைக்கிளில் பறப்பான்.

அம்மா வழியிலேயே தூரவில் உடம்பைக் கழுவிக்கொள்ள முருகன் கோயில் மணிசிணுங்கி அழைக்கும். அம்மா உருகிய வாறுகோயிலுக்குப் போவாள். பூசை முடிய நன்றாக இருள் சூழ்ந்து விடும். உள்ளங்கையில் பொததியபடி விபூதியும், சந்தனமுமாக திரும்பி வரும் போது, சீலன் வீட்டில் 'பளிச்' சென விளக்கேற்றியிருப்பான்.

மேசைக்கு முன்னால் விளக்கொளியில் முகம் விகசித்துத் செரியும்படிக்கு அவன் உட்கார்ந்திருப்பான். ஏதாவது படித்துக் கொண்டோ, எழுதிக்கொண்டோ இருப்பான். முன்னால் மென்குரலில் இசைத்தபடி ரேடியோ அவனை ரசிக்கும். பக்கத்திலே சைக்கிள் முன்சில்லை ஓயிலாக ஒடித்துச் சாய்த்தபடி அவனைப் பார்தது பளீரென ஒளிவீசிச் சிரிக்கும்.

மகள் அழகிய மொட்டு. மிகவும் சின்னவள்தான். ஆயினும் குசினியில் தேநீர் தயாரிக்க ஆயத்தமாகிக் கொண்டிருப்பாள். குலத்தை மட்டும் காணக் கிடைக்காது. அவன் வீட்டில் இருக்கும் நேரங்களை அம்மாவுக்கு அறுதியிட்டுக் கூற முடியாது. அவன் தொழில் அப்படி!

மாடுகள் கழுத்துமணிகள் கிணுகிணுக்க புல்லை அரைக்கின்ற சத்தம் கேட்கும். கூடவே மாடுகள் பலத்து மூசி மூச்சுவிடுவதும், வாலைத் தூக்கி ஈக்களை விளாசி விரட்டுவதும், கேட்கும். சாணியின் மணத்துடன் பசும்புல்லின் வாசனை நாசியில் உறைக்கும். கோழிகள் எல்லாம் ஏற்கனவே கூடுகளில் அடைக்கப்பட்டிருக்கும். குறுகுறுவெனக் கொக்கரிக்கும். 'பட பட' வெனச் சிறகுகளை உல்லாசமாக அடிப்பது கேட்கும்.

சுடச்சுட ஒரு கோப்பை தேநீர் ...... கடுமையான உழைப்புக்குப் பின், தொழுகையின் பின், மோகனமான இரவின் பிறப்பு நேரத்தில்... அருமையான தனது பிள்ளைகளுடன் அம்மா அருந்துவாள். அதுவல்லவோ வாழ்க்கை!

எல்லாமே சீலனுடன் கூடவே சேர்ந்து அம்மாவிடம் பிரிவு சொல்லாமலே போயினவோ?

அம்மா அலுத்தபடியே வைக்கோல் போரை நோக்கிப் போனாள்.

ஒரே வயிற்றில் உதித்த பிள்ளைகள் ஏனோ இவ்வாறு வேறுவேறு குணம் கொண்டவர்களாய் ஆகிப போனார்கள்? இரண்டு பேரையும் அம்மா ஒரே மாதிரித்தான் உணவூட்டினாள். ஒரே பளளிக்கூடத்திலேதான், கொண்டுபோய்ச் சேர்த்து விட்டாள். புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு, எண்ணெய் பூசி படியச் சீவிய தலைகளுடன் அவர்கள் பள்ளிக்கூடம் போவதை வாசலில் நின்று பார்த்து ரசித்தாள்.

குலம் மட்டும் படிப்பை ஒரேயடியாகக் குழப்பினான். அண்ணனுடன் நெடுகலும் சண்டை போட்டான். அம்மாவுடன் கோபித்துக் கொண்டு சிலவேளை சாப்பிடாமலே போனான். ஆறும் வகுப்புககு மேல் அவனால் ஏறவே முடியவில்லை. அம்மா அறிவாள், அவனது இளையமகன் மிகவும் புத்திசாலி ஆனாலும் ஏன் அவனால் படிக்க முடியவில்லை என அம்மாவுக்குப் புரியவில்லை.

டனவோ? அத்தம், அதமம் என்றார்கள் சாத்திரிமார்.

மத்தியான நேரம் கொடுமையானது. மௌனமானது. காற்றை வெயில் விரட்டிவிடும். ஒழுங்கைகளில் படிந்திருக்கிற புழுதியில் கச்சான் வறுக்கலாம் எனத் தோன்றும். பூவரச மரங்கள் கொடுவெயிலில் வாடித் துவளும். சனங்கள் வெளியில் தலை காட்டவே மாட்டார்கள். சொறி பிடித்த நாய்கள் மட்டும் நாவைத் தொங்கப் போட்டபடி இளைத்தவாறு நிழல் தேடி ஓடித் திரியும். 'கர்ர்ர்' எனக் கடூரமாகக் கத்துகின்ற காக்கைகள் நீர் தேடிப் பறக்கும்.

குலம் ஒரு மத்தியான நேரம் பிறந்தான். பிறந்தவுடன் எட்டு இறாத்தல் நிறை காட்டினான். அம்மா இராஜவலியில் துவண்டாள், மயக்கம் தீர நெடு நேரமாயிற்று. காய்ச்சல் ஓய சில நாளாயிற்று.

என்னவோ அம்மாவுக்குக் குலத்தைவிட சீலனை மிகவும்

அம்மா மெல்ல மெல்ல போரிலிருந்து வைக்கோலைப் பிடுங்கி இழுத்தாள். நாய் அம்மாவிடம் ஓடி வந்தது. கால்களில் 'சில்லெனெ' இருந்த ஈரமூக்கைத் தேய்த்தது. வாலைத்தூக்கி சுழற்றிச்சுழற்றி ஆட்டியது. அம்மா காலால் எட்டி உதைக்க நினைத்தாள்.

நாயின் கண்களில் நன்றி வழிந்தது. அது சீலன் கொண்டுவந்த நாய். அம்மா அதை உதைப்பாளா? கால்களை மடக்கிக் கொண்டாள்.

'சொதசொத' வென்ற மாரி காலத்தின் சோம்பலான ஒரு நாளில் சீலன் அதைத் தூக்கிக் கொண்டு வந்தான். வந்த போது வெள்ளை நிறமாக இருந்தது. இப்போ பழுப்பு நிறமாக வளர்ந்து விட்டது.

சீலன் அமைதியாகப் படித்தான். அவன் மிகவும் அமைதியான மகன். இரைந்து கதைக்கத் தெரியாதவனாக இருந்தான். நடப்பது கூட மிகவும் மென்மை. ஒரு கம்பீரம் இருக்கத்தான் செய்தது. ஆயினும் புல்லுக்குக்கூட நோகாத நடை. கண்கள் பெரிதாக இருந்தன. உள்ளங்கைகள் மென்மையாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தன. நகங்கள் ரோஸ் நிறமாகவும், நீளமாகவும... விரல்கள்கூட மெலிந்து நீளமாக நளினமாக இருந்தன. பெண்களைப் போல.

பிடிக்கது. அவன் அவளைவிட வளர்ந்து விட்ட பிறகும், மேலுதடு அரும்பிய பிறகும் ...... அவனது கேசங்களை வருடுவதில் அம்மா இன்புற்றாள். ஒரு குழந்தையினது போல மிகவும் மிருதுவான தலைமயிர்.

குலத்துக்கு மிகவும் முரட்டுத்தலைமயிர் சுருண்டு சுருண்டு இருக்கும். கண்கள் சிறுத்து உள்வாங்கி ஒடுங்கி இருந்தன, மேனியில் மண்ணெண்ணெய் நாற்றமும் ஓயில் நாற்றமும், வியர்வை வாடையும் சதா காலமும் வீசிற்று. அவன்

மழைநீர் ஓடிக்கொண்டிருந்த தெருக்களில் மிகவும் நனைந்துபோய் அனுங்கிய குரலில் கத்தியபடி நடுங்கிக் கொண்டிருந்தது. யாருக்கும் தோன்றாத இரக்கம் அவனுக்குள் சுரந்தது. தூக்கிக் கொண்டு வந்தான். ஓலைப் பெட்டியால் கவிழ்த்து மூடினான். பெரிய காரியவாதி போன்ற பாவனையுடன் அம்மாவுக்குச் சொன்னான்.

"வளர்ந்தாப் பிறகு நல்லது ...... மரநாய் வராதம்மா ..... கோழிகளுக்குக் காவலாயிருக்கும்"

தினமும் செங்காரிப் பசுவில் பால் கறந்து ஊட்டினான். அவனுக்குத் தெரியும், எந்தப் பசுவின் பால் ருசியும், கொழுப்பும் மிக்கதென்று.



சீலன் ஒரு மோகனமான மாலை நேரம் பிறந்தான். பறவைகளின் கீச்சொலிகள் அடங்கிய பிறகு, மாடுகள் எல்லாம் மேய்ச்சல் நிலங்களிலிருந்து திரும்பி வந்துவிட்ட பிறகு, மென்மஞ்சட் கதிர்களை மண்ணெண்ணெய் விளக்குகள் உமிழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் ......... அம்மாவின் இடது தொடையை சற்றே உரசியபடி, ஒரு வளர்பிறை நாளில் சீலன் பிறந்தான். புனர்பூச நட்சத்திரம். 'இவன் பெரிய காரியங்களைச் சாதிக்கப் பிறந்தவன்' என அவனது சாதகம் சொல்லிற்று,

குலம் அத்த நட்சத்திரம். அதுதான் அவனிடம் முரட்டுச் சுபாவங்கள் சேர்ந்து விட்

தொழில் அப்படி! குலம் ஒரு மெக்கானிக் ஆகவேண்டி ஆயிற்று, அவனது மாமனைப் போல. நேரங்காலமற்றவேலை. சில நாட்கள் சேர்ந்தாற் போல வராமல் இருக்க நேர்ந்தது நேரத்துக்கு உண்ண முடியாமல் போயிற்று. தன்னைக் கவனிக்க நேரமில்லாமல் போயிற்று. அண்ணன் நிறையப் படிக்க வேண்டுமென நினைத்தானோ, என்னவோ? ஓய்வொழிச்சல் இல்லாமல் வேலை வேலை எனப் பறந்தான்.

நினைக்க நினைக்க அம்மாவுக்கு நெஞ்சைப் பிழக்கும்படி நெடுமூச்சு எறிந்தது.

சீலன் ஏன் அப்படிப் போனான்?

அம்மா மாடுகளை நோக்கிப் போனாள். நாய் அம்மாவின் கால்களைத் தடுக்கப் பண்ணி விளையாடியபடி பின்னே ஓடியது.

வாலிபத்தில் துள்ளுகிறது நாய். கொழுப்பேறி உடல் பளபளக்கிறது. நன்றாகத்தான் கொழுத்துவிட்டது. சீலன்கூட கொழு கொழு என்றுதான் இருந்தான். திரட்சியான கன்னங்களும், காந்தக் கண்களுமாக ...... எவ்வளவு அழகனாக இருந்தான் இந்த அம்மாவின் மகன்!

அமைதியாக இருந்தான். ரேடியோவைக் கூட சத்தமாக முடுக்கி விடமாட்டான்.

(9ஆம் பக்கம் பார்க்க)

## கோசலே...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவனைச் சுற்றி மட்டுமே இசை இருக்கும். இரண்டாம் பேரைத் தொந்தரவு செய்ய அவன் விரும்புவதில்லை. அவன் படிக்கும்போது கூட ரேடியோ முன்னுலிருந்து ஏதாவது முணுமுணுத்துக் கொண்டிருக்கும். சைக்கிளைத் துடைக்கும் போதும் பாடியவாறு பார்த்துக் கொண்டிருக்கும். ஒவ்வொரு நாளும் உதயகாலத்தில் 'பள பள' வென மின்னுமாறு சைக்கிளைத் துடைப்பான். காற்று இருக்கிறதா எனக் கவனித்து திருப்தியுடன் தலையைக் குலுக்குவான். எதிலும் ஒரு ஒழுங்கு அவனிடமிருந்தது.

அவன் போன பிறகு எல்லாமேஒழுங்கற்றுப் போயிற்று. ரேடியோ அநேகமாக மௌனித்து விட்டது. அந்த வீடே ஜீவனற்றுப் போயிற்று. சைக்கிள் சீந்துவாரற்று தூசி படிந்து போய், ரயர்கள் காற்று இறங்கி மெலிந்துவிட, சுவரோடு சாய்த்து வைக்கப் பட்டு விட்டது.

குலத்துக்கு சைக்கிள் அவசியமென்றில்லை. அவனுக்கு நேரத்துக்கு ஒரு வாகனம். காரோ, வானே, மோட்டார் பைக்கோ ...... காற்றைக் கிழித்துக் கொண்டு வருபவனென வந்து நிற்பான்.

சீலன் போன பிறகு இந்த வீட்டில் முரட்டுத்தனமும், மௌனமும், அம்மாவின் ஏக்கப் பெருமூச்சுகளும் மட்டுமே மிஞ்சி நிற்கின்றன. மகளோ வெனில் மிகவும் சின்னவள். புரியாத பேதை. அழகிய சிறு மொட்டு.

சீலன் ஏன் வீட்டை விட்டுப் போனான் ?

அம்மா நன்றாகவே கவனித்தாள். சில நாட்களாக சீலன் சரியாகவேயில்லை. பரீட்சை வேறு நெருங்கிக் கொண்டிருந்தது

எதையோ குறித்து தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றியது; எதையோ குறித்து மிகவும் கவலை கொள்பவனாகவும் தெரிந்தது.

பரீட்சையை நினைத்துக் கலவரப்படுகிறானோ ? ஏன், நன்றாகத்தானே படித்தான் !

பிடிப்பில்லாதவன் போலக் காணப்பட்டான். அம்மாவை நிமிர்ந்து பார்ப்பதைத் தவிர்த்தான். வாய்க்குள் ஏதோ முனகிக் கொள்பவனாய் தலையை அடிக்கடி குலுக்கினான். இரவு நேரங்களில் நித்திரையைத் தொலைத்துவிட்டான். புரண்டு புரண்டு படுக்கின்ற அரவங்கள் கேட்டன. காலை நேரங்களில் அவன் சைக்கிளைத் துடைப்பதில்லை ரேடியோவை மீட்டுவதில்லை. ஆம் ! ரேடியோவை அவன் மீட்டுவதாகத்தான் அம்மா இவ்வளவு காலமும் எண்ணினாள். ரேடியோவிலிருந்து அவனது இனிய சாரீரமே மிதந்து வருகிறது போல ...... உலகின் இனிய வஸ்துக்கள் யாவும் அவனுக்காகவே படைக்கப்பட்டிருப்பதென ... அவன் தொட்டதெல்லாம் துலங்கும் என...... அவனுக்காக எங்கோ ஒரு அரிய நங்கை வளர்ந்து வருகிறாள் என ...... அவர்கள் அம்மாவுக்கு அழகிய, மதலை குதம்பும் பேரக் குழந்தைகளைப் பெற்றுத் தருவார்கள் என ... ...

சீலனா எனில், சில நாட்களாக ஏனோ தானோ என மாறிவிட்டான். பரீட்சை எழுதப் போனான். மற்றப் பையன்களிடம் காணப்பட்ட ஆர்வமோ, பரபரப்போ அவனிடம் காணப்படவில்லை. அம்மா அவனை ஏதும் கேட்கவில்லை. அவளது இனிய குழந்தையைத் தொந்தரவு செய்ய அவள் விரும்பவில்லை. எங்காவது காதல், கீதல் ...... என்று ஏதாவது ? ... அவனாகவே சொல்லட்டும் என விட்டு விட்டாள்.

பரீட்சை நடந்து கொண்டிருந்தது சீலன் வர வர மிக வெளிறினான். முகத்தில் ததும்புகிற ஜீவகளை எங்கே போயிற்று ? அம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

சீலன் அன்று வெகு சீக்கிரமே எழுந்தான். மிக நீண்ட நேரம் எங்கோ கவனமாக பல் துலக்கினான் தன்னுணர்வற்றவன் போல உலவினான். 'பளிச்' சென அம்மா பெருக்கி விட்டிருந்த முற்றத்தில் அவனது சீரான காலடிகள் பதிந்தன. அம்மா மிகவும் அதிசயப்பட்டாள்.

"நேரமாகுதெல்லே மேனே ......"

சரியாகச் சாப்பிடத்தானும் இல்லை. சைக்கிளில் ஏறி உட்கார்ந்தான். வழமை போல் ஒரே தாவலில் ஏறிப் பறந்து விடவில்லை. மிக நிதானமாக ஏறி உட்கார்ந்தான். காற்றை அளப்பவனைப் போல் சுற்றிலும் பார்வை ஓட்டினான்.

"போயிட்டு வாறன் அம்மா ......"

"வடிவாக் கடவுளை நேர்ந்து கொண்டு போ ...... "

பிறகும் ஏன் நிற்கிறான் ?

"நேரமாகு தெல்லே... "

"நான் போறன் ......"

மொட்டையாக முணுமுணுத்தான்.

மெல்ல மெல்ல ஒரு கிழவனைப் போல உழக்கிக் கொண்டுபோனான் அம்மா அவன் பின்னாலேயே போனாள். தெருவில் இறங்கி நின்று கொண்டு அவன் போவதைப் பார்த்தாள். முடுக்கால் திரும்பி மறையுமுன் 'சட்' என ஒரு தரம் திரும்பிப் பார்த்தான்

அம்மா உள்ளே வந்தாள். சற்று நேரம் திண்ணையில் உட்கார்ந்தாள். பிறகு, தலைக்கு எண்ணெய் பூசி சீவி முடித்துக்கொள்ள நினைத்து எண்ணெய்ப போத்தலைத் தேடினாள்.

வாசலில் யாரோ சைக்கிளில் வந்து நிற்பதைப் போல உணர்ந்தாள். எட்டிப் பார்த்தாள்.

சீலன் !

என்னவாயிற்று இன்று இவனுக்கு ?

மீண்டும் சீலன் உள்ளே வந்தான். எதையாவது மறந்துபோய் விட்டு விட்டுப்போனானோ ?

திண்ணையில் ஏறி அமர்ந்தான். முகம் செத்துப்போய் இருந்தது.

"ஏன் மேனே தலையிடிக்குதோ ......"

"சாச் சாய் ......"

குனிந்து நிலத்தைக் கிறவாரம் பித்தான்"

"இரு கோப்பி போட்டுத் தாறன் ......"

"............"

"இண்டைக்குப் பாடம் உனக்கு ஓடாதோ ?"

அசிரத்தையாகத் தலையைக் குலுக்கினான்.

"அப்ப ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய் ?"

"............"

"காசு ......... கீசு ........ ஏதாவது வேணுமோ ?"

சிரித்தான். இந்த அம்மா எவ்வளவு அப்பாவி !

அம்மா அவசரமாகக் கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள். வாங்கினான். இல்லை, பறித்தான் ! அவனது ஆவலும் பரபரப்பும் அம்மாவை வியப்பிலாழ்த்தின வாங்கும் போது அம்மாவின் கைகளை அவன் விரல்கள் தீண்டின. என்றுமில்லாத அழுத்தம் அவ்விரல்களில் இருந்தது. உள்ளங்கைகள் பிசுபிசுத்து வியர்த்திருந்தன.

"தங்கச்சி எங்கை அம்மா ......... ?"

"ப்ச் ........ உங்கை தான் எங்கையாவது போயிருப்பள்."

"..... ... .."

"ஏன் ?"

"சும்மா தான்"

"அவளைப் பார்த்துக் கொண்டு நில்லாமல் வெளிக்கிடு ...... நேரம் போகுது ........"

ஏதோ ஒரு உறுதியுடன் விருட்டென எழுந்தான். விறைத்து நின்று கொண்டான் சிறு நேரம். ஒரு நொடி அம்மாவின் கண்களைக் கூர்ந்து பார்த்தான். அவளது கண்களுக்குள் எதையோ தேடினான் போலும்!

"நான் ... போ ற -ன்... ... அம்மா !"

வெடுக்கெனத் திரும்பிச் சைக்கிளில் பாய்ந்து ஏறினான் வெகு வேகமாகப் போனான். ஏதோ ஒரு இனம்புரியாத சக்தி அவனை அம்மாவிடமிருந்து பிரித்து இழுத்துச் செல்கிறதென ......

அம்மா கலவரத்துடன் தெருவுக்கு விரைந்தாள். சீலன் முடுக்கால் திரும்பி மறைந்து கொண்டிருந்தான். ஒரு தரம் திரும்பிப் பார்ப்பான் என எதிர்பார்த்தாள், அவன பார்க்கவில்லை. ஆனல் ஹாண்டிலில் ஒரு சிறு பொலித்தீன் பாய்க் தொங்கிக் கொண்டிருப்பதை அம்மா அப்போதுதான் கவனித்தாள் சைக்கிள் சில்லு தெரு நீளத்துக்கு பாபப ஊர்ந்து போன சுவடாகத் தடம் பதித்துத் தெரிந்தது.

அம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை, புருவங்களைச் சுருக்கினாள்.

பாலையில் யாவும் புரிந்தன. தயங்கித் தயங்கி ஒரு பையன் சீலனின் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்தான். தலையைக் குனிந்து கொண்டே போய்ச் சுவருடன் சைக்கிளைச் சார்த்தினான். அவனை எங்கோ பார்த்த ஞாபகம் காட்டிற்று அம்மாவுக்கு. அம்மாவின் முகத்தைப் பாராமல் எங்கோ வேண்டுமென்றே பார்வையைத் திருப்பினான்.

(தொடரும்)

## அங்கிங்கெனாதபடி

வைரமுத்து அவர்கள் இறந்து விட்டாரென்ற செய்தி நமது தமிழ்ச் சமூகப் பரப்பில் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. பலவகையான மரணங்களும் மலிந்து மனிதத்தின் மெல்லிய நாம்புகளில் பலவும் உணர்வற்றுப் போயிருக்கும் ஒரு சூழலில், நடிகமணி வைரமுத்து அவர்களின் இயற்கை மரணம் அதிர்ச்சி தரும் ஒன்றில்லைப்போல.

வைரமுத்துவின் வசீகரமான முகத்துக்கும் வளமான குரலுக்கும் அப்பால், அவருடைய வாழ்க்கையும் கலையும் பிரிக்க முடியாத ஒன்றாகவும் அவருடைய காலத்துச் சமூக அமைப்புடன் இடையறாத போராட்டமுமாகவே இருந்தது. அவரைப்பற்றிய ரங்கற் குறிப்புகளிலும் பத்திரிகை ஆசிரியர் தலையங்கங்களிலும், மயான காண்டத்தையும் 'ஆரடி கள்ளி நீ' என்ற அவருடைய பிரபலமான பாடலைப் பற்றியும் தவிர வேறு ஒன்றும் கிடைப்பதில்லை; வெறுமை.

தேங்காய் எண்ணெய் விளக்குகளில் பந்தலிட்டு, விடிய விடிய வட்டக்களரியில் பாட்டும் கூத்தும் பயின்ற ஒரு பரம்பரையில் வந்தவர் வைரமுத்து. அண்ணாவி ராமர், அண்ணாவி வைரவர் மற்றும் அவரது தாய்மாமன் பிள்ளைநாயகம் போன்றோரின் ஆரம்ப உந்துதல்களுடன் அந்நாளில் இந்தியாவிலிருந்து வருகை தந்த சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் மேடையேற்றிய சுப்பையா பாகவதர் போன்றோரின் பாதிப்புக்களும் இணைந்ததே வைரமுத்து அவர்களின் கலைநெறி.

ஒரு ஆர்மோனியக் கலைஞனாகவும் நாடகஞகவுமே தனது கலை வாழ்வை ஆரம்பித்த வைரமுத்து பின்னர் 'ஸ்தரீ பார்ட்'டில் நடிக்க ஆரம்பித்து 'ராஜ பார்ட்' வரை சிறந்தார் நடேஸ்வரக் கல்லூரியில் மேனிலைக் கல்வியைத் தொடர, அந்நாளைய 'வெள்ளாள சாதிவெறி' இடம் தராமையால் தேவரையாளி இந்துக் கல்லூரியில் படிக்க நேர்ந்தது அதன் பின்னர் சில வருடங்கள் மதுரையில் முறையாகக் கர்நாடக சங்கீதம் பயின்றார்.

1953 இல் வஸந்த கான சபாவை அவர் தோற்றுவிப்பது ஒரு முக்கிய திருப்பம். அவ்வருடத்தில் வானொலிக் கலைவிழா ஒன்றினைத் திட்டமிட்ட சானா, இலங்கையர்கோன் போன்றவர்கள் மயான காண்டத்தையும் சேர்க்க விரும்பினர். அதுகாலவரை இந்த நாடகங்களை நடாத்துவதில் முக்கியமாக இயங்கிய C T செல்வராஜா, பொன்னுசாமி தேசிகர் போன்ற 'உயர்த்தப்பட்ட' சாதியினர் வைரமுத்து அவர்களைச் சேர்த்துக் கொழும்புக் கலைவிழாவுக்குப் போக ஆயத்தமாக இருக்கவில்லை, எனவே இலங்கையர்கோனின் ஒத்துழைப்புடன் வைரமுத்து மயான காண்டத்தைக் தனியே தயாரித்து, முக்கிய பங்கும் ஏற்றார். பின்னுளில் இரண்டாயிரம் தடவைகளுக்கு மேல் நிகழ்த்தப்பட்ட 'அரிச்சந்திர மயான காண்டம்' இவ்வாறுதான் தோற்றம் பெற்றது.

மயான காண்டத்தின் பிரதி எழுதப்படும்போது இலங்கையர்கோனும் வைரமுத்துவும் இணைந்தே அதனை எழுதினர்கள் என்றும் தெரிய வருகிறது. மயான காண்டத்தை விட, பூதத்தம்பி, ஞானசவுந்தரி, சத்தியவான் சாவித்திரி, நல்ல தங்காள், சாரங்க தாரா, பக்த நந்தனர் போன்ற பலவற்றை வைரமுத்து தயாரித்து நடித்தார். ஆரம்பத்தில் 'தாழ்த்தப்பட்ட' சாதியினரைச் சார்ந்த கோவில்களிலேயே இடம் பெற்றாலும், பின்னர், 'உயர்த்தப்பட்ட' வர்களின் கோவில்களிலும் இவருடைய நாடகங்கள் இடம் பெறலாயின.

'அரங்கு' என்பதைப் பொறுத்தவரை, வைரமுத்துவின் மூலம் பார்சி அரங்குதான் எனினும் ஆரம்பத்திலிருந்தே அவர் சில மெருகூட்டல்களைச் செய்தார். உதாரணமாக, நாடகத்தில் எல்லாப் பாத்திரங்களும் பாடி வந்த 'வரவுப் பாட்டை' பிரதான பாத்திரங்களுக்கு மட்டுமே என்றாக்கினார். கூத்து அம்சங்களை விட, பாடல்களுக்கும் இசைக்கும் முக்கியத்துவம் தந்தாலும் அவருடைய பக்த நந்தனாரின் இறுதிப் பகுதிகளில் கூத்து அம்சங்கள் இடம் பெறுவதாகச் சொல்லப்படுகிறது.

## ஏகாந்தன்

ஒரு முறைமையான ஆய்வின் மூலம் நடிகமணியின் முக்கியத்துவங்கள் நிலைநாட்டப்பட வேண்டும். இத்தகைய ஆய்வில் மிகவும் அடிப்படையான ஒரு சமூகவியல் அம்சம் புறக்கணிக்கப்படக் கூடாது: அவருடைய காலத்துச் சாதி வெறிச் சூழலில் எவ்வாறு தனது படைப்புக்களூடாகவும் வாழ்க்கையூடாகவும் அவர் சாதி வெறிக்கு முகம் கொடுத்தார்?

ஆர்மோனியம் வாசிக்கும் பக்க வாத்தியக்காரனுக அவர் இருந்தபோது நாடகக் காட்சி மாற்றங்களின் இடைவேளையில் பலவகையான பாடல்களை அவர் பாடுவது வழக்கம். 40 களில் சுதந்திரப் பாடல்களையும், பின்னர் சாதி ஒழிப்புப் பாடல்களையும் அவர் பாடினர். சாதி ஒழிப்புப் பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கிறபோது ஒரு தடவை அவர் கத்தியால் குத்தப்பட்டார் என்பது பலர் அறியாத ஒரு செய்தி.

பதினொரு வருடங்களுக்கு முன்பு மஹாகவியின் கோடையை தெல்லிப்பழையில் தயாரிக்க முயற்சிகள் எடுக்கப்பட்ட போது 'மாணிக்க நாயனக்காரராக' வைரமுத்து இருந்தார்; மகன் கணேசுவாக நான். ஒன்றரை மாத ஒத்திகைக்குப் பின், நாயனக்கார

(11ஆம் பக்கம் பார்க்க)

# உருளும் உலகில்

## இந்திய விடுதலைப் போராட்டத்தில்
# ஜாலியன் வாலா பாக்

தலைவணங்காது, வீரம் செறிந்த விடுதலைப் போராட்டத்தை நடத்திய தேசம் இந்தியா. அது தனது விடுதலைப் போராட்டத்தின்போது முகம் கொடுத்த முக்கிய ஒடுக்குமுறையாகிய ஜாலியன் வாலா பாக் படுகொலையை, இந்திய சுதந்திர தினத்தில் நினைவு கூர்வதன் மூலம், எமது மூதாதையரின் தியாகத்தையும், சுதந்திரத்தின் அருமையையும் எமது தலைமுறையினர் உணரமுடியும்.

எழுபது ஆண்டுகளுக்கு முன்பு — 1919ஆம்ஆண்டு ஏப்பிரல் 14 ஆம் நாள் பஞ்சாப்பிலுள்ள ஜாலியன் வாலா பாக் என்னுமிடத்தில் பிரித்தானியர் நிகழ்த்திய படுகொலைகள் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றிலும், உலக வரலாற்றிலும் வேதனையுடன் நினைவுகூரப்படும் மறக்க முடியாத தினமாகும்.

அன்றைய தினம் சீக்கியர்களுக்கும் இந்துக்களுக்கும் புது வருட தினம். ஒரே ஒரு நுழைவாசலை மட்டும்கொண்ட நாற்புறமும் சுற்று மதில் கட்டப்பட்ட மைதானத்தில் விடுதலைக் குரல் எழுப்பும் பொதுக் கூட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. ஜெனரல் டயர் தலைமையில் படைப்பிரிவு அந்த ஒரே ஒரு நுழைவாசற் பக்கம் சென்றது. கூட்டத்தை நோக்கி சுடுமாறு டயர் உத்தரவிட்டான். எப்புறமும் ஓட முடியாமல் மக்கள் சுருண்டு வீழ்ந்தனர். மைதானத்தில் ஒரு கிணறு இருந்தது. உயிர் தப்ப விரும்பி பலர் கிணற்றுக்குள் பாய்ந்தனர். இந்தக் கொடிய இராணுவ அட்டகாசத்தில் 379 பேர் மாண்டனர். 1200 பேர் காயமுற்றனர்.

ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து இராணுவச் சட்டத்தின் கீழ் 8 மாதங்கள் வரை இச் செய்தியை பிரித்தானிய அரசு உலகின் கண்களிலிருந்து மறைத்தது. ஆனல் 8 மாதங்களின் பின்பு அச் செய்தி அடக்கப்படமுடியாத முழுவேகத்தில் வெளிவந்தது. விபச்சாரி என்றாலும்கூட வீதியில் நிர்வாணமாகச் செல்ல அவளுக்குச் சற்று வெட்கமாகத்தானிருக்கும். பிரித்தானியாவின் ''ஜனநாயகமும்'', ''மனிதாபிமானமும்'', ''சட்டத்தின் ஆட்சியும்'' உலகரங்கில் நிர்வாணமாய் நின்றன. ஜாலியன் வாலா பாக் படுகொலையைக்கண்டு வெட்கப்படாத ஒரு பிரித்தானியன் இருப்பானுனல், அவன் விபச்சாரியையும் விட மோசமானவனே.

இப்படுகொலையை ஜவஹர்லால் நேரு ''காட்டுமிராண்டித் தனமான செயல்'' என சினம்கொண்டு வர்ணித்தார். படுகொலை நிகழ்ந்த ஒரு வருடத்தின் பின்பு அந்தப் படுகொலை நிகழ்ந்த இடத்திற்கு விஜயம் செய்த நேரு, அந்த இடத்தைப் பார்த்த போது கண்கலங்கி நின்றதாக, அவரது வாழ்க்கை வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது.

இப் படுகொலையைப் பார்த்து, ''நாகரிக உலகம் வெட்கித் தலைகுனியக் கூடிய செயல்'' எனக்கூறிய காந்தி, மேலும் கூறுகையில் ''தனது அரசியல் அபிலாசையை ஈட்டுவதற்காக எவ்வளவு தூரம் மனச்சாட்சிக்கு விரோதமாய் நடக்கமுடியும் என்பதற்கு இது ஒரு கேவலமான உதாரணம்'' எனக் கூறினர்.

**சி. சண்முகவடிவேல்**

தன்னை ஒரு ''ஜனநாயக'' நாடு என்று காட்டிக் கொள்வதற்காகவும், தான் ''சட்டத்தின் ஆட்சியை'' பின்பற்றும் நாடு என்பதை உலகரங்கில் நிரூபிப்பதற்காகவும், ஒரு கண்ணும் பூச்சி விளையாட்டு விசாரணையை பிரித்தானியா நடாத்தியது. எவ்வாறாயினும் விசாரணை நடத்துதல் என்ற சம்பிரதாயத்தை பிரித்தானியா பேணியதற்கு ஒரு ''சபாஷ்'' போடுவோம்.

இவ்விசாரணையில் ஜெனரல் டயர் சற்றும் வெட்கமின்றி, அப்பட்டமாக பின்வருமாறு கூறினன். ''இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதற்காக பஞ்சாபியரின் நெஞ்சங்களில் பீதியை ஏற்படுத்தவே இவ்வாறு சுட உத்தரவிட்டேன்'' என்றான். பாவம் டயர்!! ஒடுக்கு முறைகளைக் கண்டு மக்கள் சினம் கொண்டு சீற்றம் கொள்வார்களே தவிர அடங்கி ஒடுங்கிப் போய்விட மாட்டார்கள்என்பதை சற்றும் உணரவில்லை. இப்படுகொலை பிரித்தானியாவின் முகத்தில் அசிங்கம் மிக்க கறையாய்த், திரண்டது. டயரின் சாகசம் பிரித்தானியாவின் முகத்தில் அசிங்கத்திரையை உருவாக்கியமைதான்!

டயரின் கூற்றை மேலும் சற்று பரிசீலனை செய்வோம். 1967 ஆம் ஆண்டு வியற்னமிலுள்ள மைலாய் என்னும் கிராமத்தில் வியற்கொங் கெரில்லாக்கள் அமெரிக்க இராணுவத்திற்கு எதிராக ஒரு தாக்குதலை மேற்கொண்டனர். அத்தாக்குதலைக் கண்டு கையறு நிலையை அடைந்த அமெரிக்க இராணுவம், கெரில்லா எதிர் நடவடிக்கையாக மக்களைப் படுகொலை செய்ய முற்பட்டது. மைலாய் கிராமம் சுற்றிவளைக்கப்பட்டது. அக்கிராமத்தில் வாழ்ந்த ஆண், பெண், குழந்தைகள், முதியோர் உட்பட 70 பேரை இராணுவம் கொன்றொழித்தது.

இப்படுகொலையை சோவியத் யூனியனும், சீனவும் உலகரங்கிற் பிரபல்யப்படுத்தின. இப்படுகொலைக்கு 'மைலாய்ப் படுகொலை' என்று தலைப்புமிட்டன. அமெரிக்காவின் ''ஜனநாயகம்'' உலகரங்கில் பிணவாடைவீசியது. நாகரிகமுள்ள அமெரிக்கப் பிரசைகள் வெட்கித் தலைகுனிந்தனர். தமது அரசுக்கெதிராகப் பெரும் கண்டனக் குரல்களை எழுப்பி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். டயரைப் பின்பற்றிய அமெரிக்க அரசு இறுதியில் என்னவானது?

ஒடுக்குமுறைப் படுகொலைகளால் மக்களைப் பீதியடைய வைத்தல் என்பதற்குப் பதிலாக, ஒடுக்கப்படுபவன் சீற்றத்தையும், ஒடுக்குபவன் அவமானத்தையும் ஈட்டுகிறுன் என்பதே உண்மை. டயரைப் பின்பற்றுவோர் எப்பொழுதும் தமது வாழ்வைப் பின்தள்ளி விடுகிறுர்கள்.

போராட்டங்களை அழிப்பதற்கு ஒரு முன்னுதாரணத்தைப் படைக்க டயர் விரும்பினுன். ஆனல் சுதந்திர எண்ணம் கொண்ட இந்திய மக்கள் இதனை, ஒரு கெட்ட பின்னுதாரணமாக உலகரங்கில் நிரூபித்துக் காட்டினுர்கள்.

இப்படிப் போராடிப்பெற்ற சுதந்திரத்தின் அருமையை இந்திய மக்கள் உணர்ந்தவர்கள். அதனை இன்றைய சுதந்திர தினத்தன்று மறவாது நினைவு கூர்வது, ஜாலியன் வாலாபாக்கை மீண்டும் மீண்டும் நினைவுகூர்வது, இந்தியாவிற்கும் உலகிற்கும் எப்போதும் நல்லதாகும். □

# 'திசை' சிறுகதைப் போட்டியின் பரிசளிப்பு வைபவம்

திசை சிறுகதைப் போட்டியின் பரிசளிப்பு வைபவம், திசை அலுவலகத்தில், எளிமையான முறையில் சென்ற சனிக்கிழமை காலை நடைபெற்றது. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், வாசகர்கள் வருகை தந்திருந்தனர். 'திசை' ஆசிரியர் மு பொன்னம்பலம் வைபவத்திற்குத் தலைமைவகித்தார். நிர்வாக ஆலுநர் திரு. எம். கனகராஜநாயகமும் பங்கு பற்றினர். இரண்டு நிமிட மௌனத்துடன் வைபவம் ஆரம்பமானது.

ஆசிரியர் தமது தலைமை உரையின் போது ''சற்றடே றிவியூ தமிழர்களின் அரசியல் ரீதியான அவலங்களை தமிழர் அல்லாதவர்களுக்கு உணர்த்துவதை நோக்கமாகக் கொண்டு வெளிவந்தது. 'திசை' சமூகம், பொருளாதாரம், கலை, இலக்கியம், அரசியல் போன்ற அக்கறைகளுடன் வெளிவந்து விழிப்புணர்வைத் தூண்ட முயல்கிறது. திரு. க. கந்தசாமி அவர்களின் இலட்சியத்தை நன்கு நிறைவேற்றி வருகிறது. பழம் பெரும் பத்திரிகையாளர் கே. கணேஷ் எழுதியிருப்பது போல், பத்திரிகையின் நீடித்த வெற்றிக்கு விளம்பரங்கள் அவசியம் நிர்வாகம் இதைக் கவனத்திற் கொள்ளவேண்டும்'' என்று சொன்னர்.

எழுத்தாளரும் ஆசிரியருமான செம்பியன் செல்வன் பேசுகையில் ''பத்திரிகையின் வளர்ச்சிக்கு விளம்பரங்கள் மிக அவசியமானவை. திசை சிறந்த வாசகர்களைக் கொண்டிருக்கிறது. திசை வெளியிடும் நல்ல தரமான விடயங்களை மக்களுக்கு அருகே கொண்டு செல்ல, நிர்வாகம் முயலவேண்டும். விற்பனையை அதிகரிக்க விநியோகத்தில் அதிக முயற்சி தேவை'' என்றார்.

பல்கலைக்கழக விரிவுரையாளரான கலாநிதி சோ. கிருஷ்ணராஜா கருத்துத் தெரிவிக்கையில் ''வாசகனுக்குத் தீனி போடுவது, அவனை வளரச் செய்வது என்ற இரண்டு அம்சங்கள் பத்திரிகை உலகில் நோக்கங்களாயுள்ளன. 'திசை' வாசகரை உயர்த்த முயல்வது பாராட்டத்தக்கது எமது பிரதேசத்தில் நீண்ட காலமாக இத்தேவை இருந்து வந்திருக்கிறது ஒரு சில விடயங்களைமட்டும் கருத்திற் கொள்ளாது பல விடயங்களையும் திசை வெளிக் கொண்டு வருகிறது. குறிப்பாக, ஓவியம் பற்றிய விழிப்புணர்வைத் தூண்டுவதில் 'திசை' முக்கியமாயிருக்கிறது. மாற்றுக் கருத்துள்ளவரும் விரும்பி வாசிக்கும்படியாக திசை வெளிவருகிறது'' என்று குறிப்பிட்டார்.

''வாரப் பத்திரிகையாக இருந்தபோதிலும் செய்திகளை விமர்சனங்ளுடன் தருகிறது. எங்கள் மண்ணின் தேவை, கொதிநிலை என்பன திசையில் இருக்கிறது. பத்திரிகை விநியோகத்தில் இன்னும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். கொழும்பிலுள்ள எனது நண்பன் ஐந்து ஆறு கிழமையாக கொழும்பிற்கு 'திசை' வரவில்லையென்றும், திசை நின்று போய்விட்டதா என்று கேட்டும்எனக்குக் கடிதம் எழுதியிருந்தான். திருகோணமலையிலிருந்து வந்த ஒருவருடன் கதைத்தபோது 'திசை'யை நன்றாகப் பாராட்டினர்; ஆனல் மிகத் தாமதமாகவே அங்கு வருவதாகக் குறைப்பட்டார்.'' இவ்வாறு கவிஞர் சு. வில்வரத்தினம் தெரிவித்தார்.

விரிவுரையாளர் இரா. சிவச்சந்திரன் பேசுகையில் ''ஆசிரியரை 30 வருடங்களாகத் தெரியும். ஆற்றல் மிக்கவர். திசையில் நான் முதலில் படிப்பது ஆசிரியத் தலையங்கத்தைத் தான்'' என்றார்.

சிறுகதைப் போட்டி நடுவர்களில் ஒருவரான க. சட்டநாதன், போட்டிக் கதைகளைப் பற்றிய குறிப்புகளைத் தெரிவித்தார். முதல் மூன்று பரிசுக் கதைகளின் முக்கிய அம்சங்களைச் சிறிது விரிவாகத் தொட்ட அவர், ஏனைய ஐந்து கதைகளும் கூட ''நேர்த்தியாகச் சொல்ல முயன்ற எத்தனங்கள் என்பதில் சந்தேகமில்லை'' என்றார். கதைகளை யார் எழுதியது என்பது நடுவர் குழுவிற்குத் தெரியாமலிருந்தது. இது நடுநிலை பேணுவதற்குப் பெரிதும் உதவியது என்றும் அவர் சொன்னர்.

கொழும்பு 'வீரகேசரி' நிறுவனத்தில் முன்பு கடமையாற்றிய தனது அனுபவத்தை வைத்து, சில ஆலோசனைகளையும் தெரிவித்தார். ''ஒரு பத்திரிகைக்கு விளம்பரமும், விநியோகமும் மிக முக்கியமானவை. நம்பிக்கையான ஒருவரை நியமித்து விளம்பரங்களைப் பெற முயற்சிக்க வேண்டும். அதேபோல் விநியோகப் பகுதி தீவிர முயற்சியுடன் இயங்க வேண்டும். திசையின் விநியோகம் மிக மோசம். கடைசியாக வந்த 'திசை' இதழ், வழமைபோல் வியாழக்கிழமை மாலையே வெளியாகி விட்டது ஆனல் எனது வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள கடைக்கு வெள்ளிக்கிழமை 12 மணிக்குத்தான் வந்தது. இடையில் நான்கு தடவைகள் அக்கடையில் விசாரித்தேன். இதேபோல் திசையின் ஆரம்ப இதழ், இருபாலையிலுள்ள பேப்பர் விற்கும் கடையில் மூன்று நாளைக்குப் பிறகே, கிடைத்தது. எவ்வளவுதான் தரமான பத்திரிகையாக இருந்தாலும் அதன் வெற்றி சரியான விநியோகத்திலும், விளம்பரங்களிலும்தான் தங்கியிருக்கிறது'' என்று, குறிப்பிட்டார்.

பின்னர், பரிசு பெற்றவர்களில் வருகை தந்திருந்தவர்களுக்கு, நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிர்வாக ஆலுநரான திரு. எம். கனகராஜநாயகம் பரிசுகளை வழங்கினர்.

அ. யேசுராசாவின் நன்றியுரையுடன் வைபவம் முடிவுற்றது.

□ ரூபன் □

# பயங்கரவாதம் — எதிர்ப் பயங்கரவாதம்

கடந்த கிழமை 160 பொது மக்கள் ஜே. வி. பியினரால் கொல்லப்பட்டுள்ளனர். இப்படி இவர்களால் கொல்லப் பட்டவர்களில் அநேகமானோர் பாதுகாப்புப் படையில் கடமை புரிபவர்களின் உறவினர் எனக் கூறப்படுகிறது. இதுகாலவரை ஜே. வி. பியினர் புரிந்த பலவித படுகொலைகளில் இது ஒரு புதிய அலையாகும் என, பத்திரிகைகள் அறிவிக்கின்றன. அத்தோடு சென்ற வாரத்தை 'பயங்கர ஆட்சியின் வாரம்' எனவும் வர்ணித்துள்ளன.

''இப்போது இலங்கையில் நடைபெறுவது பயங்கர ஆட்சியாகும். நாடெங்கும் பாதுகாப்புப்படையினரால் இளைஞர்கள் சுடப்பட்டு அவ்விடத்திலேயே கொளுத்தப்படுகின்றனர். இப்படி இளம் பரம்பரையை எவ்வளவுகாலம் நாம் அழிக்கப்போகிறோம்?'' என சிறிமாவோ கேட்டுள்ளார். அவர், அரசாங்கம் பயங்கர ஆட்சி நடத்துவதாகச் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இன்று இளைஞர்கள் சாகடிக் கப்பட்டு எரிக்கப்படுகிறார்கள் என்று ஒப்பாரிவைக்கும் சிறிமாவோ, 1971 இல் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் தனது ஆட்சியின் போது சாகடிக்கப்படக் காரணமாயிருந்தார் என்பதையும், நாம் மறந்துவிடமுடியாது!

## தொடர்பு சாதனங்களுக்கு கூடுதல் சுதந்திரம்

அண்மையில் ஹராரேயில் கூடிய, அணிசேரா நாடுகளின் அரசாங்கங்களிடையிலான தொடர்புக் கழகக் கூட்டத்தில் மூன்றும் உலக நாடுகளின் தொடர்புச் சாதனங்கள் பற்றி இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

எலெக்ரோனிக், அச்சுச் சாதனங்கள் என்பனவற்றுக்கும் செய்தி நிறுவனங்களுக்கும் கூடிய சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். இத்துறைகளில் தனியார் துறைக்கு இன்னும் பரந்த அளவிலான இடமளிக்கப்பட வேண்டும் என்பவையே, அத்தீர்மானங்களாகும்.

பாகிஸ்தான் பிரதிநிதி இத் தீர்மானங்களைக் கொண்டு வந்தார்.

## ரஞ்சனும் வரதரும்

''வட-கிழக்கு முதலமைச்சர் இலங்கை அரசுக்கு எதிரான அறிக்கைகளை விடுகிறார். இதற்கு நீங்கள் என்ன கூறுவீர்கள்?'' என்று ரஞ்சனிடம் சண்டே ரைம்ஸ் நிருபர் கேட்ட கேள்விக்கு, ''அவர் தொடர்ந்தும் அவ்வாறு செய்வாரானால் அதற்கெதிராகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று, ரஞ்சன்கூறினார்.

தொடர்ந்து ''அப்படியானால் வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைப்பீர்களா?'' என்று நிருபர் கேட்டார்.

''இதுபற்றி தற்போது கூற மாட்டேன், நாம் குற்றங்களுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கிறோம்'' என்று கூறினார்.

## அன்னா...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரத்தகுரலில் சொல்லியபடி, அவசரமாய்க் கடதாசியில் கிறுக்கிவிட்டு என்னிடம் தருவாள். நான் அதிலுள்ள வரிகளை வாசித்து, மனதில் பதித்த பின் மௌனமாக அதை அவளிடம் திருப்பிக்கொடுப்பேன். ''இந்த வருஷம், இலையுதிர் காலம் செதியாக வந்துவிட்டது'' என்று அன்னா அந்திரீவ்னா பலமாகச் சொல்லிய படியே, தீக்குச்சியை உரசி, ஆஷ்ட்ரேயில் அக்கடதாசித் துண்டை எரித்துவிடுவாள்.''

உள்நாட்டுப் போர் நடந்த கொடுமையான ஆண்டுகளின் போதோ, ஸ்டாலினிஸப் பயங்கரத்தின்போதோ, தான் மிகவும் நேசித்த தாய்நாட்டை விட்டு ஓடிச்செல்லாததைப் பற்றி அன்னா அக்மதோவா பெருமிதம் கொண்டிருந்தார். வெளிநாட்டில், 1961இல், இரங்கற்பா முதன்முறையாக வெளியிடப்பட்டபோது (சோவியத்யூனியனில் இரண்டு ஆண்டுகளின் முன்னர் இது வெளியிடப்பட்டது) அக் கவிதையின் தொடக்கத்தில் நான்கு வரிகளை அவர் அமைத்தார். தனது நாட்டு மக்களின் துயரங்களைப் பகிர்ந்து கொண்ட பெருமையை அவ் வரிகள் வெளிப்படுத்துகின்றன. ''இல்லை, இன்னொரு வானக் கூரையின் கீழல்ல,/ அந்நியச் சிறகுகளின் அணைப்பின் கீழல்ல,/ எனது மக்களோடு அப்போது இருந்தேன்—/அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த, அதே இடத்தில்.''

அன்னா அக்மதோவா இன்று சோவியத் யூனியனில் உயர்வாக மதிக்கப்படுவதற்கு, இதுவும் ஒரு காரணமாகும். அடிமைத்தனமும், முகஸ்துதியும், பொய்மையும் இலக்கியத்தை ஆதிக்கம் செய்த ஒரு காலகட்டத்தில், உயர்வான கவித்துவ நேர்மைக்கு ஓர் உதாரணமாக அவர் இருந்தார் என்ற உண்மையும், இன்னொரு காரணமாகும். மற்றவையெல்லாம் அழிய சொல் நீடித்து நிலைக்குமென்ற ஆழமான நம்பிக்கையுடன், தனது கவித்துவப் பணிக்கு உண்மையானவராக, அவர் இருந்தார். அவரது முழுநிறைவான தூய்மையை முனைப்பாகக் காட்டுவதான நான்குவரிக் கவிதையொன்றில், இதை அவர் சொல்லியுள்ளார். அதை இவ்வாறு மொழிபெயர்த்துள்ளேன்:

''தங்கத்தில் களிம்பு பிடிக்கிறது, உருக்கு அழிகிறது, பளிங்கு தூளாகிறது. / சாவின் நுகர்வுக்காய் எல்லாமே காத்திருக்கின்றன. / துக்கந்தான், பூமியில் மிகத் திண்மையான பொருள் / மாட்சிமை உடைய சொல்லே, நீடித்து நிலைத்திருக்கும்.''

நன்றி : தி ஐலன்ட் □

## வைரமுத்து...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று உலகினைக் கருதும் பட்சத்திலேயே மேடையில் உலகினைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியும்,'' என்று பிரெஃட் கூறுகிறார். வைரமுத்து, தான் சார்ந்து நின்ற இசை நாடக முறைமையினையே, சீரிய தன்மை நோக்கி மாற்றப்பட வேண்டிய ஒன்று என்ற கருத்துடன் நின்று செயற்பட்டவர். அதனாலேயே இசை நாடக மரபு வைரமுத்துவின் அரங்கானது. ''உலகினை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டே தத்துவஞானிகள் உலகினைப் பல்வேறு வழிகளில் வியாக்கியானம் செய்துள்ளனர்'' என்ற கருத்துக்கமைய நோக்கினும், இசை நாடக அரங்கம் முன்னர் உயர்நிலைப் பட்டவர்களின் அரங்காக இருந்தபோதிலும், வைரமுத்துவிடம் கையளிக்கப்பட்டதும், வைரமுத்துவால் வளர்த்தெடுக்கப்பட்டதுமான அரங்கம், காலாதிகாலமாகப் பாமர மக்கள் மத்தியில் முறைசாராக் கல்வி நெறி நின்று அறிவூட்டியும் மகிழ்வூட்டியும் வந்துள்ள சாதனமாகவே அமைந்தது. அந்தத் தேவை இன்னமும் இந்த நாட்டிற்குத் தேவை என்பதை மறுப்பதற்கில்லை. மேலும், ஒரு மக்கள் கூட்டத்தினரின் பாரம்பரியத்தையும், தனித்துவத்தையும் பாதுகாத்து நிலை நிறுத்துவதற்கு, அச்சமூகத்தவரின் பாரம்பரியக் கலைகள் பெரிதும் உதவமுடியும் என்ற வகையிலும் வைரமுத்துவின் அரங்கம் என்றென்றும் அவசியமான ஒன்றாக அமைகிறது. எமது மக்களின் பண்பாட்டின் மொழியாகவும், அவர்களின் விழுமியங்களின் மொழியாகவும் வைரமுத்துவின் அரங்கம் இருந்து வந்துள்ளது என்பதையும் மறுக்கவியலாது. அவ்வரங்கினைத் தொடர்ந்து வளர்த்தெடுக்க வல்லவர் வழிவழி தோன்றுவாராக. □

## அங்கிங்கெனு...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரின் மனைவி செல்லமாக நடித்த நாரீமணி, 'தாழ்த்தப்பட்ட'ஒருவருடன் மனைவியாக நடிக்க மறுத்தமையால் திடீரென நின்று போயிற்று அம்முயற்சி. அதன் பின் ஓரிரு மாதங்கள் நடிகமணியிடம் மத்தளம் பயின்றமை எனக்குச் சுவையான அனுபவம். அவருடைய உடலை இறுதியாகப் பார்ப்பதற்குச் சென்றபோது பழைய நினைவுகள் கிளர்ந்தன.

ஒரு பத்துப் பதினைந்து கலை, இலக்கிய, விமர்சனவான்களே வந்திருந்தனர். 'பிரமுகர்கள்', 'உபயகாரர்கள்', 'கலைப்புரவலர்கள்' என யாருமில்லைத் தான். (அதிலென்ன குறைகிறதாம்?) ''வைரமுத்துவை அழைத்து நாடகம் போட இருந்தேனே! பல்கலைக்கழகத்தில் கௌரவிக்க இருந்தேனே! பத்திரிகையில் எழுத இருந்தேனே! ஐயோ திடீரென்று போய் விட்டாரே'' என்று தொண்டையில் நரம்பு புடைக்கப் பேசுவதற்கும் பத்திரிகையில் எழுதுவதற்கும் ஆட்கள் நிறையவே இருக்கிறார்கள். இந்த அறுபத்தாறு வருடங்கள் இவர்கள் எல்லாம் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

தமிழ்த் தேசிய இனத்திற்கு என்ன இல்லாவிட்டாலும் பேசத் தெரிகிறது. 'வாய்ச் சொல்லில்வீரரடி'என்று பாரதி சும்மாவா சொன்னான்! □

# நிகழ்வுகள்

### 8 - 8 - 89 செவ்வாய்

இலங்கை — இந்திய அமுல் பற்றி புது டெல்லிப் பேச்சு வார்த்தைகளின் விளைவாக இந்தியா சமர்ப்பித்த புதிய யோசனைகள் பற்றி இலங்கை அரசியல் வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்தன □ வன்செயல்களை சகல தரப்பினரும் நிறுத்துமாறு கூட்டாக அழைப்பு விடுவதற்கு வருமாறு எதிர்க்கட்சிகளிடம் கோருவதென, அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது □ வட - கிழக்கு மாகாணப் பாடசாலைப் பகிஷ்கரிப்பைக் கண்டித்து, ஜனநாயக மாணவர் அமைப்பு என்ற பெயரில் அறிக்கை வெளியிடப்பட்டது □ 2 ஆம் திகதி முதல் வல்வெட்டித் துறையில் நடைபெற்ற அசம்பாவிதங்கள்பற்றி ஆராய விசாரணைக் குழு ஒன்றை நியமிக்குமாறு ஈ ஜ.மு. அரசையும் ஏனைய அரசியல் கட்சிகளையும் கோரியது □

### 9 - 8 - 89 புதன்

வல்வெட்டித்துறைப் பகுதியில் பாதிக்கப்பட்ட இடங்களையும், மக்களையும் ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய அதிகாரிகள் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர் □ வாகனங்களில் சென்றவர்கள் வல்லைச் சந்தியில் இறக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டனர். நூற்றுக்கும் அதிகமானோர் இவ்வாறு இரண்டு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டனர் □ பிரபல தொழில் அதிபர் கே. ஜி. குணரத்தினம் கொழும்பில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் □ தென் பகுதியில் நடைபெற்ற பல்வேறு வன்செயல்களில் 40 பேர் பலியாகினர் □ ஈ.பி. ஆர். எல்.எவ். கட்சியின் உறுப்பினர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டு, நாடாளுமன்றத்திற்குச் சமூகமளித்தனர் □ மாலைதீவுச் சதி முயற்சியில் ஈடுபட்டதாக மேலும் 6 இலங்கைத் தமிழ் இளைஞருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது □

### 10 - 8 - 89 வியாழன்

கடந்த வாரத்தில் பருத்தித்துறை வல்வெட்டித்துறைப் பகுதிகளில் பொதுமக்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களை கண்டித்து, யாழ். பல்கலைக் கழக மாணவர்,ஆசிரியர், ஊழியர், நிர்வாக உத்தியோகத்தர் சங்கங்களின் இணைப்புக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டது □ மட்டக்களப்பில் நடைபெற்ற தொண்டர் ஆசிரியரின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது □ மபந்தோட்டை பொலிஸ் நிலையம் மீது அதிகாலை தீவிரவாதிகள் தாக்குதல் மேற்கொண்டதில், 2 பொலிசார் கொல்லப்பட்டனர்; நவீன ஆயுதங்களும் அபகரிக்கப்பட்டன □ சாவகச்சேரியில் தமிழ் நாட்டுப் பத்திரிகையாளர் சிலர் நகரில் சேதமடைந்த பகுதிகளைப் படம் பிடித்தனர்; மக்களையும் பேட்டி கண்டனர் □

### 11 - 8 - 89 வெள்ளி

அமைதிப்படை விவகாரம் தொடர்பான புதுடெல்லி யோசனைகள் பற்றிய அமைச்சர்களின் கருத்தை விசேட கூட்டமொன்றில் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ கேட்டறிந்தார் □ காலை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற தனியார் பஸ்ஸின் பயணிகள் இயக்கச்சியில் வைத்து, ஆயுதபாணிகளான மூவரால் கொள்ளையடிக்கப்பட்டனர் □ யாழ். மின்சார நிலைய வீதியில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் இரண்டு பொது மக்கள் காயமடைந்தனர் □ துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஒரு இளைஞனின் சடலம் யாழ். பலாலி வீதியில் கிடந்தது □ பிற்பகல் பண்டத்தரிப்பில் நடந்த அசம்பாவிதத்தில் இருவர் மரணமானார்கள்; அதில் ஒருவர் பெண் □

### 12 - 8 - 89 சனி

வல்வெட்டித்துறைச் சம்பவங்கள் உண்மையாயின் அது மனிதஉரிமை மீறலாகும் என, அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார் □ அகங்கம பொலிஸ் நிலயம் அதிகாலை தாக்கப்பட்டது. பொறுப்பதிகாரி உயிரிழந்தார்; 4 பொலிசார் காயமடைந்தனர்; ஆயுதங்களும் அபகரிக்கப்பட்டன □ வல்வை வேம்படியில் வீதியால் சென்று கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார் □ யாழ். பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக, காலையில் 28 வயது இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் □ தீவிரவாதிகளினால் அடையாள அட்டை பறிக்கப்பட்டவர்களுக்கும், அதைத் தொலைத்தவர்களுக்கும் பொலிஸ் நிலையங்கள் மூலம் தற்காலிக அடையாள அட்டை வழங்கப்படுமென, அமைச்சர் ரஞ்சன் சொன்னார் □

### 13 - 8 - 89 ஞாயிறு

அமைதிப்படை விலகல் விவகாரத்தில் இரு நாடுகளுக்கு இடையிலும் இணக்க நிலை உருவாகியுள்ளதென்றும், அடுத்தகட்டப் பேச்சு நடக்குமென்றும், அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார் □ ரூபவாஹினியின் பிரதம செய்தி ஆசிரியரான குலசிறி அமரதுங்க இரத்மலானையிலுள்ள அவரது வீட்டில் வைத்து, இனந் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் □ பனை அபிவிருத்திச் சபைக்கு நடப்புவருட நிதியாக 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக, அதன் தலைவர் கே. நடராசா தெரிவித்தார் □

### 14 - 8 - 89 திங்கள்

யாழ். மாவட்டத்தில் இன்று பாடசாலைகள் திறக்கப்பட்ட போதும்,மாணவர்களின் வரவு மிகக் குறைவாகவே இருந்தது □ வானத்தில் ஹெலிகொப்ரர் சுற்ற, பெரும் எண்ணிக்கையிலான படையினர் வல்வெட்டித்துறைப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல், நடத்தினர் □ அண்மையில் நடந்த வல்வைச் சம்பவங்கள் பற்றி அமைதிப்படையினருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள், இந்திய தொலைக் காட்சியில் திரிக்கப்பட்டுக் கூறப்படுகின்றதென ஈ.ஜ மு. அறிக்கையொன்றில் கூறியுள்ளது □ 1987 நொவம்பரில் தனக்கும், ராஜீவ் காந்திக்கும் இடையில காணப்பட்ட உடன்பாடு இரகசியமானதல்லவென, ஜே. ஆர். ஜயவர்த்தன தெரிவித்தார் □

திசை
THISAI

# திசைமுகம்

''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''

## இந்தியப் புரட்சி

இம்மாதம் 15 ஆம் திகதி இந்தியா தனது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு பல வருடங்களுக்கு முன்னரே, ஸ்ரீ அரவிந்தர் ஓகஸ்ட் 15 ஆம் திகதியை இந்தியச் சுதந்திர தினமாகக் குறிப்பிட்டுள்ளார். இதுவே இவரது பிறந்த தினமும் கூட.

''இந்தியாவே உலகின் ஆத்மா'' என்று கூறிய அரவிந்தர், ''இந்தியாவின் தேசியம் என்பது, அதன் ஆத்மீகப் பண்பே'' என்று தனது கூற்றின் பொதுத் தன்மையை விளக்கியுள்ளார்.

இவ்வளவுக்கு அரவிந்தரால் முக்கியத்துவப் படுத்தப்படும் இந்தியா, உலகுக்கு அளித்த பங்களிப்பு என்ன? அதன் முக்கியத்துவத்தை இந்தியச் சுதந்திரப் போராட்டத்திலேயே நாம் காணவேண்டும்.

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்தெழுந்த சுதந்திரப் போராட்டம் இந்தியப் புரட்சி. இந்த வரிசையில் அமெரிக்கப் புரட்சி ஒரு முன்னோடி. ஜனநாயக விழுமியங்களில் ஊறிய ஆயுதம் தாங்கிய சுதந்திரப் போராட்டம் அமெரிக்கப் புரட்சி.

இதன் அருட்டலில் எழுந்த அடுத்த ஆயுதப் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சியாகும். மக்களிடையே நிலவிய மான்ய முறை ஏற்றத்தாழ்வுகளை இது களைய முன்வைத்த சுலோகங்கள் சமத்துவம், சகோதரத்துவம் சுதந்திரம்.

இதன் அடுத்த பாய்ச்சல், பொருளாதார சமத்துவத்தை இலட்சியமாகக் கொண்ட ஆயுதம் தாங்கிய ரஷ்யப் புரட்சி.

இம் மூன்று பெரும் புரட்சிகளுக்கும் உள்ள ஒற்றுமை அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தளத்தின் சுதந்திரப் போராட்டம் என்பது மட்டுமல்ல ஒவ்வொன்றும் ஆயுதபலத்தையே தம் போராட்டச் சக்தியாகக் கொண்டிருந்தன.

ஆனல் இந்தியப் புரட்சி?

இங்குதான் இந்தியப் புரட்சி இதுகாலவரை வந்த ஏனைய புரட்சிகளில் இருந்து குண ரீதியாக வேறுபடுகிறது. காந்தி தலைமை தாங்கிய இந்தியப் புரட்சி, ஆயுத பலத்தை நம்பாது, ஆத்ம பலத்தையும் அதன் வழியான அன்பையும் ஆயுதமாகக் கொண்டது.

இது காலவரை ஓடிவந்த மனித வரலாறு, எவ்வளவு தான் நாகரிகம் கொண்டதாகவும் வளர்ச்சிபெற்ற ஒன்ருகவும் இருப்பதாகக் கூறிக்கொண்டாலும், அது தன் எதிரியை ஆயுதம் கொண்டே இன்னும் தாக்குகிறது. ஆயுதங்கள் மாறியிருக்கலாம். ஆனல் பழைய மிருக நிலையிலிருந்து விடுபடாத அதே குரூரம்

இந்த நிலைக்குத்தான் முதன் முதலாக விடை கூறுகிறது இந்தியப் புரட்சி. எதிரியை ஆத்ம பலத்தாலும் அன்பாலும் அணுகியதன் மூலம், முதன் முதலாக மனிதனை மிருக எச்சத்திலிருந்து விடுவித்து அவனை மனித நிலைக்கு ஏற்றிய முதல் முழுப் புரட்சி இது. இதுவே இந்தியாவின் பங்களிப்பு.

ஆனல் இன்று?

எப்படி மேற்குலக நாடுகள் தமது புரட்சிகள் முன்வைத்த ஜனநாயக, சோஷலிச விழுமியங்களைப் பறக்கவிட்டு ஹிட்லரின் நிழல் விழும் சி. ஐ. ஏ க்களையும், மொசாட்டுகளையும் கைக்கொண்டுள்ளனவோ அவ்வாறே இந்தியாவும் தனது ஆத்ம பலத்தைக் கைவிட்டு அவற்றோடு அணிசேரும் ஆயுதபலம் என்னும் அகன்ற இருட்டில் இறங்கியுள்ளதா?

# ஜே. ஆரை ஜெயித்துள்ள பிரேமதாஸ

இந்தியப் படை விலகல் பற்றிய பிரேமதாஸவின் திடீர் அறிவிப்பைக்குறைகூறும் பாணியில் ''சண்டே ரைம்ஸ்'' என்னும் கொழும்புப் பத்திரிகைக்கு கடந்தமாதம் ஜே.ஆர். பேட்டியளித்திருந்தமை அனைவரும் அறிந்ததே. இதன் பின்பு தேசிய அரசாங்கம் அமைக்கப் படவேண்டுமென அவரது ஆலோசனையும் வெளியாகி கடுமையான வாதப் பிரதிவாதத்திற்குள்ளாகியமையும் தெரிந்ததே.

ஜே. ஆரின் இவ்இரு அறிவிப்புக்களும் பிரேமதாஸ அரசாங்கத்தினுல் கடும் கண்டனத்திற்குள்ளாகின. குறிப்பாக வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினுவால் ஜே. ஆர். மிகவும் உதாசீனம் செய்யப்பட்டமை பலருக்கும் வியப்பைக்கூட ஏற்படுத்தியது. இவ்வாறு பிரேமதாஸவின் அரசாங்கத்தின் கடும் கண்டனம், உதாசீனம் என்பனவற்றின் மத்தியில் ஜே. ஆரின் குரல் இப்போ தலைகீழாக மாறிவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்த மாற்றத்தின் பிரதிபலிப்பாகவே, இந்தியப்படை வெளியேறல் விவகாரம் பற்றி 'இந்தியா ருடே' பத்திரிகைக்கு ஜே. ஆர் பேட்டி அளித்த போது, ''ஜனதிபதி பிரேமா இந்தியப்படைகளை வெளியேறச் சொன்னல் வெளியேற வேண்டியதுதானே!'' என்று கூறியுள்ளார். முன்னர் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு பேட்டி அளித்த போது, இந்தியப் படைகளை பாராட்டிப்பேசிய ஜே. ஆர். தற்போது இந்தியாவை சினம் கொள்ளும் விதத்தில், ''இந்தியப்படைகள் இரண்டு வருடங்களாக என்ன செய்கின்றன?'' என்று கேட்டுள்ளதன் மர்மம் என்ன என்பதே, அரசியல் விமர்சகர்களின் மத்தியில் அடிபடும் கேள்வியாகும்.

ஜே.ஆர்.மீதானபிரேமதாஸ அரசாங்கத்தின் உதாசீனங்களை அரசியல் பரிபாஷைக் கூடாகப் புரிந்துகொண்ட ஜே.ஆர், தனது நிலைப்பாட்டை மாற்றியிருக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

அப்படி இல்லாமல் ஜே. ஆர் தொடர்ந்தும் தனது கடந்த காலப் பாணியிலேயே அபிப்பிராயங்களை முன் வைத்திருந்தால், அவருக்கு அளிக்கப்பட்டு வந்த பாதுகாப்புகள் தளர்த்தப்பட்டிருக்கலாம்; மேலும் பின்பு ''கும்பலில் கோவிந்தா'' என்று அவருடைய பேச்சுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப் பட்டிருக்கலாம் என்ற பயமும் அவரைத் தொட்டிருக்குமா?

## சுதந்திரத்துக்கு தியாகம் செய்தவர்கள்

இந்திய சுதந்திர தினத்தின் நினைவாக, இந்திய ஜனதிபதி ஆர். வெங்கட்ராமனின் பேச்சு கடந்த திங்கள் இரவு இந்திய வானெலியில் ஒலிபரப்பப்பட்டது.

அப்பேச்சின் இடையில் அவர் ''எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' என்று தமிழில்கூறிவிட்டு, ''இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது எத்தனையோ பேர் பலவித தியாகங்களையும் உயிர்த்தியாகங்களையும் செய்துள்ளனர் என்றும், அவர்களில் தெற்கில் வீரபாண்டிய கட்டப்பொம்மன், கிழக்கில் ஸ்ரீ அரவிந்தரும் வடக்கில் பகவத்சிங், சுபாஷ் சந்திரபோஸ் என்பவர்கள் தலையாயவர்கள் என்றும்போற்றினர்.

## மீண்டும்அதே பழையபாட்டு?

''ஒரு பக்கத்தில் சிங்களம் சிங்களம் என்று வகுப்புவாதம் பேசினல், மறுபக்கத்தில் உள்ளவர்கள் தமிழ் தமிழ் என்று வகுப்புவாதம் பேசுவர். எவரும் வகுப்புவாதம் பேசாமல் நியாயமான முறையில் பேச வேண்டும், நடந்துகொள்ள வேண்டும்.''

இவ்வாறு ஐக்கிய சோஷலிச முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரான அதாவுட செனிவிரத்தின, கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் சிங்கள மக்களின் உரிமைகளெதையும் பறிக்கவில்லை. அவர்களை இரண்டாம்தர மூன்றும்தரப் பிரசைகளாக உதாசீனமாகவும் நடத்தவில்லை. ஆனல் சுதந்திரமடைந்த நாட்தொட்டு இன, மொழி, பிரதேச ரீதியில் தமிழ்பேசும் மக்களின் உரிமைகள்தான் சிங்கள அரசினலும், பேரினவாத உணர்வுகொண்ட சிங்களவர்களினலும் பறிக்கப்பட்டு வந்துள்ளன; இன்றும் உரிமைகள் வழங்கப்படவில்லை.

உரிமைகளிற்கான குரல்கள் தமிழ்பேசும் மக்களிடமிருந்து எழுந்தபோதெல்லாம், அதை ''வகுப்புவாதம்'', ''இனவாதம்'' என்று கூறிக் கொச்சைப்படுத்தினர். சில இடதுசாரிகள் சிங்கள இனவாதத்துடன் சமப்படுத்தியும் சொல்லி வந்தனர்.

சிங்களப் பேரினவாதத்தின் பாரபட்சமும், ஒடுக்கு முறையும் இந்த அழகிய தீவை இன்றைய மிக மோசமான அவல நிலைக்குள் அமிழ்த்திய பின்பும் கூட, பழைய ''சமன்பாட்டை''த்தான் அதாவுட போன்ற சோஷலிஸவாதிகள் பாடவேண்டுமா?

## ஊழியர் சேமலாபநிதியில் வீட்டுக் கடன்

ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்திற்கிணங்க சேமலாப நிதிக்குத் தனது சம்பளத்திலிருந்து பணம் செலுத்தும் உறுப்பினர், ஒருவர், ஊழியர் சேமலாப நிதி இருப்பினை ஈடாக வைத்து வீட்டுக்கடன் பெற்றுக் கொள்ளலாம்.இதற்கான ஊழியர் சேமலாப நிதிக் கடன் படிவங்கள் தொழிற் கந்தோர்களில் தற்சமயம் வழங்கப்படுகின்றன. விண்ணப்பதாரி விண்ணப்பப் படிவத்தினைத் தயாரித்து சொத்துக்கள் அமைந்துள்ள மாவட்டத்திலுள்ள தொழில் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

காணி வாங்குவதற்கு, வீடு கட்டுவதற்கு, வீட்டினை விலைக்கு வாங்குவதற்கு, இருக்கும் வீட்டினைத் திருத்தி அமைப்பதற்கு, வீடு / காணியை ஈடு மீட்பதற்கென ஐந்து காரணங்களுக்கு இந்தக் கடன் வழங்கப்படும்.

## வல்வை....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

4. வட-கிழக்கு மாகாண அரசின் கருத்துப்படி எல்.ரி.ரி.ஈ. யினர் இந்திய அமைதிப்படையின் மீது நிகழ்த்திய விஷமத்தனமான தாக்குதலில் சிக்குண்டு, சிலர் பலியானதாகவும் புலிகள் வீசிய எரிகுண்டு, களினல் தொடர்மாடிக் கட்டிடங்களில் தீப்பிடித்து பல கடைகள், வீடுகள் நாசமான தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப் படுகொலைகள், ஏனைய சம்பவங்கள் குறித்து, விசாரணை நடாத்துமாறு ஈ. ஜ. முன்னணி கோரியுள்ளது. இலங்கை அரசும் இந்தியாவை இதுபற்றி விசாரணை நடாத்துமாறு வேண்டியுள்ளது. இந்திய அரசும் இச் சம்பவங்கள் குறித்து விசாரித்தறியுமாறு ஒரு அதிகாரியைப் பணித்துள்ளதாகச், செய்தி ஒன்று கூறுகிறது.

மேற்படி சம்பவங்கள் குறித்த நான்கு வகை விளக்கங்களில் எதுதான் உண்மை? ''சத்தியமேவ ஜயதே!'' (உண்மையே வெல்லும்!)

## ராஜீவ் ஜே. ஆர்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தானம் செய்து கொள்வதைத் தடுக்கவும், அவர்களுக்கிடையில் மோதலை நீளவைத்து இலங்கை இனப்பிரச்சினையைக் கடத்தவும் திட்டமிட்டார்.

இந்த ரகசிய ஒப்பந்தத்தில், மாகாணசபையின் உறுப்பினர் தொகை, மாகாண அமைச்சர்களின் தொகை, ஆளுநரின் அதிகாரங்கள், அதிகாரப் பரவலாக்கத்தை நாடாளுமன்றம் கட்டுப்படுத்துவதற்குரிய அதிகாரம், வட-கிழக்கு எல்லைகள்' குடியேற்றம் போன்றவை உள்ளடக்கப்பட்டிருந்தன.

இதில் முக்கியமானதொன்ருகிய அதிகாரப் பரவலாக்கத்தையே இன்று இந்திய அரசு, படை விலகலுக்குத் தடையாக முன்வைக்கிறது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைக் கடத்துவதற்கும் தமிழ் மண்ணில் யுத்தமும் அழிவும் நீடிக்கவும் ஜே. ஆர். போட்ட திட்டம் இன்றும் நீளுகிறது.

ஆனல் அவரின் திட்டத்தில் விழுந்துள்ள ஓட்டை, சிங்கள மக்களின் உயிரையும் சேர்த்துக் குடிக்கத் தொடங்கியுள்ளதே!

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 18-8-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.